மலர்: 52 இதழ்:8 ஆகஸ்ட் 2010 விலை ரூ.10

# திருக்கோயில்

இந்துசமய அறநிலையத்துறை வெளியீடு





# சோளிங்கர் அருள்மிகு இலட்சுமி நரசிம்ம சுவாமி திருக்கோயில் தங்க விமானத் திருப்பணிக்கு ரூ. 5.30 கோடி நன்கொடை

ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப் பெற்ற 108 ஸ்ரீ வைஷ்ணவ திவ்விய தேசங்களில் ஒன்றான, வேலூர் மாவட்டம், வாலாஜா வட்டம், சோளிங்கர் அருள்மிகு இலட்சுமி நரசிம்ம சுவாமி திருக்கோயிலின் சுவாமி மூலவர் சன்னதி, தாயார் சன்னதி ஆகியவற்றின் விமானங்களுக்கு ரூ 20கோடி மதிப்பீட்டில் 110கிலோ தங்கத்தில் தகடுகள் பதிக்கும் திருப்பணி துவங்கப் பெற்று, தற்போது பணி நடைபெற்று வருகிறது.

சோளிங்கருக்கு அருகிலுள்ள எறும்பி எனும் ஊரைச் சொந்த ஊராகக் கொண்ட பெங்களூரு தொழிலதிபரும், திருப்பணிக்குழுவின் துணைத் தலைவருமான திரு.எம்.பூபாலன், அவர் மனைவி திருமதி பூங்கொடி, அவர் குடும்பத்தினர், நண்பர்கள் ஆகியோர் தங்கத்தகடு பதிக்கும் திருப்பணிக்கு நன்கொடையாக ரூ.5 கோடிக்கான காசோலையை, 26.07.2010 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களிடம் வழங்கினார்கள்,

மேலும் இந்நிகழ்ச்சியில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர், திரு.ஏ.எம்.வேலு மேற்குறித்த தங்க விமானத் திருப்பணிக்காக ரூ. 30 லட்சத்திற்கான வரைவோலையை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களிடம் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன், இராணிப்பேட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், இத்திருக்கோயிலின் திருப்பணிக்குழுத் தலைவருமான திரு.ஆர்.காந்தி, தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை முதன்மைச் செயலர் திரு.க.முத்துசாமி, இ.ஆ.ப. இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் திரு. ப.ரா.சம்பத், இ.ஆ.ப. உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பெங்களூரு தொழிலதிபர் திரு. எம்.பூபாலன், அவர் மனைவி திருமதி பூங்கொடி, அவர் குடும்பத்தினர், நண்பர்கள் ஆகியோர் ஏற்கனவே மேற்படி தங்க விமானத் திருப்பணிக்கு நன்கொடையாக ரூ.9.07 கோடி தொகையை திருக்கோயிலுக்கு வழங்கியுள்ளார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் 10.09.2010 அன்று மகாசம்ப்ரோட்சண [குடமுழுக்கு] விழா நடத்த உத்தேசித்துள்ளதால், திருப்பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

திருக்கோயில்
திங்கள் இதழ்

இந்து சமய அறநிலையத்துறை வெளியீடு

நிறுவிய ஆண்டு: 1958
திருவள்ளுவர் ஆண்டு: 2041
ஆடி - ஆவணி
ஆகஸ்ட் 2010
மலர்:52. இதழ்:8.

சிறப்பாசிரியர் (ம)
வெளியிடுவோர்
திரு.**ப.ரா. சம்பத்,** இ.ஆ.ப.,
ஆணையர்,
இந்து சமய அறநிலையத் துறை,
நுங்கம்பாக்கம்.சென்னை-600 034.

ஆசிரியர்
**தென்னம்பட்டு ஏகாம்பரம்,** எம்.ஏ.,

ஆணையர் அலுவலகம்
இந்து சமய அறநிலையத் துறை
119. உத்தமர் காந்தி சாலை,
நுங்கம்பாக்கம்,சென்னை-600 034.
தொலைபேசி எண்:
28334811/12/13
மின்அஞ்சல்
tn.endowments@gmail.com

## சிறப்பாசிரியர் பக்கம்



பொதுவாகவே நாம் கொண்டாடும் திருவிழாக்கள் அனைத்துமே ஆன்மிக உணர்வை வளர்ப்பதோடு சமுதாய நல்லிணக்கத்தையும் முன்னிலைப்படுத்துவன. அந்த வகையில் ஆடித்திங்கள் என்பது அம்மனுக்கு உரிய சிறப்பு மாதம் அல்லவா! அம்மன் திருக்கோயில்கள் தோறும் திருவிழாக்கள், முருகப் பெருமான் திருக்கோயில்களில் எல்லாம் ஆடிக்கிருத்திகை, நதிக்கரையோரம் எல்லாம் ஆடிப்பெருக்குவிழா என்றெல்லாம் சிறப்பாக விழாக்கள் கொண்டாடி வருகிறோம்.

இவ்விதழில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் படைத்த 'குறளோவியத்திலிருந்து' ஓர் எழுத்தோவியம், சான்றோர் சிந்தனையில் முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்களின் 'உயிரினும்...' எனும் திருக்குறள் சிந்தனை, மூத்த தமிழறிஞர் முனைவர் வை. இரத்தினசபாபதி அவர்களின் 'திருமுறைகள் காட்டும் வாழ்வியல்' என அறிஞர் பெருமக்களின் கட்டுரைகள் வெளியாகியுள்ளன. படித்து இன்புறுங்கள்.

திருக்கோயில்களின் தூய்மையான பராமரிப்பு, திறமையான நிர்வாகத் திறனுக்காகப் பெறப்படும் பன்னாட்டு தரச்சான்றிதழ் (ISO) குறித்து துறையின் சார்பில் செய்தித்தாள் ஒன்றுக்கு அளித்த விளக்கம் பக்தர்களின் பார்வைக்காக வெளியிடப்பெற்றுள்ளது.

வாசகர் பெருமக்கள் தொடர்ந்து நல் ஆதரவினை வழங்கிட அன்புடன் வேண்டுகிறோம்.

ப.ரா. சம்பத்

(ப.ரா. சம்பத், இ.ஆ.ப.,)
ஆணையர்

## இதழின் உள்ளே...

**முகப்பில்: திருவாரூர் ஆழித்தேரோட்ட விழா**


- பிரார்த்தனை – திருநாவுக்கரசர் தேவாரம் –3
- குறளோவியம் – முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் 4
- சான்றோர் சிந்தனை – முத்தமிழ்க் காவலர் டாக்டர் கி.ஆ.பெ.விசுவநாதம் – 9
- திருமுறை காட்டும் வாழ்வியல் – 'இருத்தல்' –பேராசிரியர் முனைவர் வை. இரத்தினசபாபதி –11
- நீதிக்கதை – பயனுள்ள அறிவு –பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர்–15
- சர்வ தந்திர சுதந்திரர் –ஸ்வாமி –17.
- திருவான்மியூர் அம்பிகை –எஸ்.சாயிராமன் –20.
- திருவாசகத்தேன் –திரு.ப.முத்துக்குமாரசுவாமி –23.
- ஐயங்கார்குளம் ஆஞ்சநேயர் –பனையபுரம் அதியமான் –29.
- விழா நிகழ்ச்சிகளின் தொகுப்பு –32
- திருக்கோயில்களுக்கு பன்னாட்டு தரச்சான்று ஒரு விளக்கம் –35
- ஆன்ம தரிசனம் –தென்னம்பட்டு ஏகாம்பரம் –38.

02 திருக்கோயில் ஆகஸ்ட் 2010

அருள்மிகு தியாகராஜ சுவாமி



அருள்மிகு கமலாம்பாள்



அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயில், திருவாரூர்.




# திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்


## திருவாரூர் போற்றித் திருத்தாண்டகம்

கற்றவர்கள் உண்ணுங் கனியே போற்றி
கழலடைந்தார் செல்லுங் கதியே போற்றி
அற்றவர்கட்கு ஆரமுதம் ஆனாய் போற்றி
அல்லல் அறுத்து அடியேனை ஆண்டாய் போற்றி
மற்றொருவர் ஒப்பில்லா மைந்தா போற்றி
வானவர்கள் போற்றும் மருந்தே போற்றி
செற்றவர்தம் புரமெரித்த சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி.

சங்கரனே நின்பாதம் போற்றி போற்றி
சதாசிவனே நின்பாதம் போற்றி போற்றி
பொங்கரவா நின்பாதம் போற்றி போற்றி
புண்ணியனே நின்பாதம் போற்றி போற்றி
அங்கமலத்து அயனோடு மாலுங் காணா
அனலுருவா நின்பாதம் போற்றி போற்றி
செங்கமலத் திருப்பாதம் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி.



பூவார்ந்த சென்னிப் புனிதா போற்றி
புத்தேளிர் போற்றும் பொருளே போற்றி
தேவார்ந்த தேவர்க்குந் தேவே போற்றி
திருமாலுக்கு ஆழி யளித்தாய் போற்றி
சாவாமே காத்தென்னை யாண்டாய் போற்றி
சங்கொத்த நீற்றெஞ் சதுரா போற்றி
சேவார்ந்த வெல்கொடியாய் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி.




"துறவற வாழ்வு மேற்கொள்ள முடிவு செய்துவிட்டேன். அதற்குத் தாங்கள் எனக்கு வழங்கும் அறிவுரை என்னவோ?"

நடுத்தரமான வயதும்–நல்ல உடற்கட்டும்–விழிகளில் மங்காத ஒளியும் கொண்ட ஒருவன் வள்ளுவரிடம் இந்தக் கேள்வியைக் கேட்டவாறு தலை வணங்கி நின்றான்.

"முற்றும் துறந்தவரே உயர்ந்த நிலைக்கு உரியவர். துறந்தவரைப்போல நடிப்போரை

நான் துறவி என அழைக்கமாட்டேன். நடை, உடை, பாவனைகளால் தங்களை துறவியெனக் காட்டிக்கொண்டு மக்களை ஏமாற்றுவோர் பெருகி வருகிறார்கள். அவர்களை நான் வெறுக்கிறேன். அவர்களிடம் அறிவைப் பறிகொடுக்கும் மக்களைக் கண்டு இரக்கம் கொள்கிறேன். துறவு என்பது வேடத்தில் இல்லை. முதலில் அதற்கு உள்ளம், பக்குவப்பட வேண்டும்."

வள்ளுவர், துறவுபற்றித் தான் கொண்டுள்ள கருத்தைக் கோடிட்டுக் காட்டினார்.

"அதனால்தான் தங்களை நாடி வந்தேன். என் உள்ளம் பக்குவமடைய உற்றது கூறுவீராக."

வள்ளுவர், மென்சிரிப்பொன்றைத் தவழவிட்டவாறு அவனைப் பார்த்துச் சொன்னார்:

"பற்றுக்களைப் பற்றிக்கொண்டு விடாதே! அப்படிப் பற்றிக்கொண்டால் துன்பங்களும் உன்னை விடாமல் பற்றிக்கொள்ளும்."

இதைக் கூறிவிட்டு இந்தக் கருத்துச் செழித்துக் குலுங்கும் குறளையும் பாடிக்காட்டினார்:

**"பற்றி விடாஅ இடும்பைகள்**
**பற்றினைப்**
**பற்றி விடாஅ தவர்க்கு."**

குறளைக் கேட்டதும் வந்தவன், வள்ளுவப் பெருமகனாரை வணங்கி,

"பெரியீர்! இந்தக் குறள்மொழி போதும் என் துறவு நெறி காப்பதற்கு! விடையருள்க!" என்றான். "பற்றுக்களை அறவே விட்டு விடுவேன்" எனச் சூளுரைத்துக் கிளம்பிய அந்தப் புதுத் துறவியின் செவியில் வள்ளுவர் குரல் விழுந்தது. என்ன குரல் அது!

"பற்றுக!"

என்பதுதான் அந்தக் குரல்! அவன் திடுக்கிட்டுத் திரும்பினான். "இப்போதுதானே 'பற்றினை விடுக' என்றுரைத்தார்! அதற்குள் 'பற்றுக' என்கிறாரே: இஃதென்ன முரண்பாடு?" என்று திகைத்து நின்றான்.

"பற்றுக்களை விட்டொழிப்பதற்கு ஒரு பற்றைப் பற்ற வேண்டும். அதுவே துறவுக்குரிய இலக்கணம்."

வள்ளுவர் விளக்கினார். வந்தவனுக்குப் புரியவில்லை! எந்தப் பற்றும் கூடாது என்கிறபோது ஒரு பற்று மட்டும் எங்கிருந்து வந்தது? அவனே வினாக்குறியானான்.


"எதிலும் பற்றில்லாதவராக யார் இருக்கிறாரோ அவரிடம் மட்டும் பற்றுக் கொள்ள வேண்டும். உன் பற்றுக்களை விட்டொழிப்பதற்கு அத்தகையோரிடம் நீ கொள்ளும் பற்றுத்தான் துணை நிற்கும்."

குறளையும் பாடிக் காட்டினார் வள்ளுவப் பெருந்தகை:

**"பற்றுக பற்றற்றான்**
**பற்றினைஅப்பற்றைப்**
**பற்றுக பற்று விடற்கு."**

பற்று விடுதல்– பற்றினைக் கொள்ளுதல்– இரண்டுக்கும் கிடைத்த விளக்கமென்னும் ஒளி கொண்ட துறவற வாழ்க்கையில் சிறந்து விளங்கினான் வள்ளுவரைக் காண வந்தவன்.

அதிகாரம்: *35* துறவு பாடல்கள்: *347,350*



முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர்

# திருவாரூர் ஆழித் தேரோட்ட விழா

சைவ சமய குரவர் நால்வர் பெருமக்களால் பாடிப் பாடிப் பரவசம் அடைந்த பதியாகவும், பிறக்க முத்தி தரும் பெருமை மிக்க தலமாகவும், பஞ்ச பூதத் தலங்களுள் பிருதிவி (மண்) தலமாகவும், சப்த விடங்கத் தலங்களுள் முதன்மையான தாகவும், மனுநீதிச் சோழனின் அருள் வரலாறு நிகழ்ந்தேறிய திருத்தலமாகவும், சுந்தரமூர்த்தி சுவாமிகளின் அருள் வாழ்வு மலர்ந்த திருத்தலமாகவும் எனப் பல்வேறு சிறப்புகளைப் பெற்றிருக்கும் திருத்தலம் திருவாரூர்த் தலமாகும்.

தேரும், திருக்குளமும், திருக்கோயிலும், திருவிழாவும், பன்னிரு திருமுறைகளிலும் பாடப் பெற்ற சிறப்பும் உடையது திருவாரூர் க்ஷேத்திரமாகும்.

தமிழகத் திருக்கோயில்களில் நடைபெறும் தேர்த் திருவிழாக்களுள், திருவாரூர் ஆழித் தேரோட்ட விழா சிறப்பான திருவிழாவாகும். அதனால் அன்றோ திருவாரூர் தேர் அழகு என்ற பழமொழியும் வழங்கி வருகிறது.

திருநாவுக்கரசு சுவாமிகளும், இறைவன் தியாகேசப் பெருமானைத் தேரோடு இணைத்து 'ஆழித்தேர் வித்தகனை யான் கண்டது ஆரூரே' எனப் புகழாரம் சூட்டிப் பாடியுள்ளார். இத்தகைய பெருமைகள் வாய்ந்த மிகத் தொன்மையான ஆழித் தேரோட்ட விழா, வழக்கம் போல இவ்வாண்டும் ஆனித் திங்கள் 32ஆம் நாள் 16.07.2010 வெள்ளிக்கிழமை காலையில் நடைபெற்றது.

திருக்கோயிலின் கீழ வீதியில் உள்ள தேர் நிலையடி அருகில் நடைபெற்ற தேரோட்டத் தொடக்க விழாவில் மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் மனைவி திருமதி சாந்தா ஸ்டாலின், மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு. கே.ஆர்.பெரியகருப்பன், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் திரு. உ.மதிவாணன் ஆகியோர் வடம் பிடித்து தேரோட்டத்தைத் தொடங்கி வைத்தனர்.





விழாவில் நாகை நாடாளுமன்ற உறுப்பினர் திரு.ஏ.கே.எஸ்.விஜயன், மாநில மின் வாரிய ஆலோசனைக் குழு உறுப்பினர் திரு. பூண்டி கே.கலைவாணன், சுகாதாரத் துறை முதன்மைச் செயலாளர் திரு.வி.கே.சுப்புராஜ் இ.ஆ.ப., இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் திரு. ப.ரா.சம்பத் இ.ஆ.ப., மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் திரு. பிரவீன்குமார் அபினபு இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு. மீ. தங்கவேல், மாவட்ட ஊராட்சி தலைவர் திருமதி செ. கமல வதனம், நகரமன்றத் தலைவர் திரு. கு. தென்னன், தஞ்சாவூர் மண்டல அறநிலையத் துறை இணை ஆணையர் திருமதி. மா. கவிதா, திருவாரூர் மாவட்ட அறநிலையத் துறை உதவி ஆணையர் திரு. த. கஜேந்திரன், தஞ்சை மாவட்ட அறநிலையத் துறை உதவி ஆணையர் திரு.ஜெ.சிவாஜி உள்ளிட்ட ஆயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்று தேரை வடம் பிடித்து இழுத்தனர்.

திருச்சி பாரத மிகுமின் நிறுவனப் பொறியாளர்கள் உதவியோடு தேர் இயக்கம் செய்யப்பட்டது.

ஆழித் தேரைத் தொடர்ந்து அருள்மிகு நீலோத்பலாம்பாள், அருள்மிகு சண்டிகேசுவரர் தேர்களும் வடம் பிடிக்கப்பட்டன.

தஞ்சாவூர் மண்டல அறநிலையத் துறை இணை ஆணையர் திருமதி. மா.கவிதா அவர்கள் தலைமையில் நாகை மாவட்ட அறநிலையத் துறை உதவி ஆணையரும், இத்திருக்கோயிலின் தக்காருமான திரு. ஜி.தென்னரசு, உள்துறை கட்டளை பரம்பரை அறங்காவலர் திரு. ராம் வி.தியாகராஜன், செயல் அலுவலர் திரு. வி.கண்ணபிரான் ஆகியோர் விழாவிற்கான ஏற்பாடுகளைச் சிறப்பாகச் செய்திருந்தனர். மாவட்ட காவல் துறையினர் பாதுகாப்புப் பணியினைச் சிறப்பாகச் செய்திருந்தனர்.





திருவாரூர் ஆழித்தேரோட்ட விழாவில் (16.07.2010) திருமதி. சாந்தா ஸ்டாலின் மாண்புமிகு அமைச்சர்கள் திரு. கேஆர்.பெரியகருப்பன், உ. மதிவாணன் மற்றும் முக்கிய பிரமுகர்கள்

## சான்றோர் சிந்தனை

# உயிரினும்...

**"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்."**
என்பது திருக்குறளில் ஒரு குறள்.

'விழுப்பம்' என்பது சிறப்பு என்று பொருள்படும். அது முறையே குணம், நலம், புகழ், பெருமை, உயர்வு என்றாகும். இத்தகைய நலன்கள் அனைத்தையும் கொண்ட சிறப்பை 'ஒழுக்கம் தரும்' என்பது வள்ளுவர் கருத்து.

நல்லொழுக்கம், தீயொழுக்கம் என ஒழுக்கம் இரு வகைப்படும். எனினும், ''ஒழுக்கம்'' என்றால், அது தீயொழுக்கத்தைக் குறிக்காமல் நல்லொழுக்கம் ஒன்றை மட்டுமே குறிக்கும் என்பதை இக்குறள் நமக்கு அறிவிக்கிறது.

ஆடை அணிகள், மாட மாளிகைகள், ஆடு மாடுகள், அலங்கார வகைகள், பொன் பொருள்கள், நீர் நிலங்கள், வண்டி வாகனங்கள் முதலியவற்றுள் எதுவும் விழுப்பம் தராது என்பதை இக்குறள் வெளிப்படையாகக் கூறுகிறது.

மேடை மீது ஏறி ஆவேசமாய்ப் பேசுகிற பேச்சு. அருமையாக எழுதுகின்ற எழுத்து, அள்ளிக் கொடுக்கின்ற கொடை, அதிகாரம் வகிக்கின்ற பதவி ஆகியவைகளால் பெற முடியாத சிறப்பை ஒருவன் ஒழுக்கம் ஒன்றினால் பெறலாம் என்பதை ''ஒழுக்கம் விழுப்பம் தரும்'' என்ற சொற்கள் நமக்கு அறிவித்துக் கொண்டிருக்கின்றன.



மக்களாய்ப் பிறந்து, மக்களாய் வாழ்ந்து, மக்களாகவே மடிய விரும்பும் எவரும், ஒழுக்கத்தைப் போற்றி வளர்த்துக் காப்பாற்றக் கடமைப்பட்டவர் என்பதை "ஓம்பப்படும்" என்ற சொற்களால் வள்ளுவர் வற்புறுத்திக் கூறியிருக்கிறார்.

கடமை! ஒழுக்கத்தைக் காப்பாற்ற வேண்டியது கடமைதான் என்றாலும், நிழல் தரும் என்றே மரம் வளர்க்கப்படுவதையும், பலன் தரும் என்றே பயிர் வளர்க்கப்படுவதையும், பால் தரும் என்றே பசு வளர்க்கப்படுவதையும் கண்ட வள்ளுவர், 'அப்படிப்பட்ட மக்களிடத்தில் எதுவும் தராத கடமையைச் சொல்லி என்ன பயன்?' என்ற புண்பட்ட மனத்துடன் ஆராய்ந்து, பிறகே "விழுப்பம் தரும் ஓம்பு" என்று பலனையும் சுட்டிக் காட்டியிருப்பதாகத் தெரிய வருகிறது.

இக்குறளில் இவ்வளவு கூறியும் அவர் மனம் அமைதியடையவில்லை. இதற்குள் ஓர் உவமையும் கூற வேண்டும் என்ற முடிவுக்கு வந்து விட்டார். பொன்னை, பொருளை, மனைவியை, மக்களைக் காப்பாற்றுவதைப் போல ஒழுக்கத்தையும் காப்பாற்ற வேண்டும் எனக் கூற எண்ணியும், இவற்றுள் எதை இழந்தாலும் திரும்பப் பெற முடியுமே, ஒழுக்கத்தை இழந்து விட்டால் திரும்பப் பெற முடியாதே என நினைத்து, இவற்றுள் எதையும் உவமையாகக் கூறவில்லை என்று தெரிகிறது.

இவ்வுலகில் இழந்தால் திரும்பப் பெற முடியாதவை இரண்டு. ஒன்று ஒழுக்கம்; மற்றொன்று உயிர். ஆதலால், போனால் திரும்பி வராத ஒழுக்கத்திற்கு உவமை கூற எண்ணிய வள்ளுவர், போனால் திரும்பி வராத உயிரைத் தேடிப் பிடித்து வந்து உவமையாகக் கூறியிருப்பது எண்ணி வியக்கக்கூடியதாகும்.

இந்த உவமையிலுங்கூட, 'உயிரைப் பாதுகாப்பது போல ஒழுக்கத்தைப் பாதுகாக்க வேண்டும்' என்றா கூறி இருக்கிறார்? அதுதான் இல்லை. **'உயிரைக் காப்பாற்றுவதை விட அதிகமாக ஒழுக்கத்தைக் காப்பாற்றியாக வேண்டும்'** எனக் கூறிவிட்டார். இவ்வுண்மையை **உயிரினும்** என்ற சொல் நமக்கு

## முத்தமிழ்க் காவலர்
## டாக்டர் கி.ஆ.பெ.விசுவநாதம்

நன்கு விளக்கிக் கொண்டிருக்கிறது.

இருபது நூற்றாண்டுகளுக்குப் பிறகு, எந்த விஞ்ஞானியாவது ஒருவன் தோன்றி, இழந்த உயிரைத் திரும்பக் கொண்டு வந்தாலும் கொண்டு வரலாம். ஆனால் எத்தனை நூற்றாண்டுகளானாலும் இழந்து போன மானத்தைத் திரும்பக் கொண்டு வர எந்த விஞ்ஞானியினாலும் இயலாது என்ற விஞ்ஞான ஆராய்ச்சி உண்மையைக் கூட, வள்ளுவர் பெருமான் இந்த 'உயிரினும்' என்ற சொல்லால் அறிவித்திருக்கிறார் என்பதைக் கண்டு மகிழுங்கள்.

''உயிரினும் சிறந்த பொருள் வேறு எதுவுமில்லை'' என்ற பலருடைய கருத்தைத் திருவள்ளுவர் மறுக்கிறார். "ஒன்று இருக்கிறது; அது ஒழுக்கம் தான்" என அழுத்தம் திருத்தமாகக் கூறுகிறார். இப்போராட்டத்தை, இக்குறளில் உள்ள "உயிரினும்" என்ற ஒரு சொல் நமக்குப் போராடிக் காட்டுகிறது.

உயிரையுடைய எவரும் உயர்ந்தவராகக் கருதப்படுவதில்லை. ஒழுக்கம் உடைய சிலரே உயர்ந்தவராகக் கருதப்படுவர். ஆதலின் உயிரைக் காப்பதை விட ஒழுக்கத்தைக் காப்பதே சிறப்பு என்பதை 'உயிரினும்' என்ற ஒரு சொல் நமக்குப் போராடிக் காட்டுகிறது.

மானத்தை இழப்பதா? அல்லது உயிரை இழப்பதா? என்ற ஒரு கொடிய நிலைமை ஏற்பட்டு விட்டால், அந்த நிலையிலும் 'மானத்தை இழக்காதே! உயிரை இழந்து விடு!' என்ற உயர்ந்த நெறியை வள்ளுவர் நமக்கு 'உயிரினும்' என்ற ஒரு சொல்லால் உணர்த்திக் காட்டுகிறார்.

உயிரை இழந்து ஒழுக்கத்தைக் காப்பாற்றிக் கொண்டவன் உள்ளபடியே இறந்தவனாயினும் உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உயிர் வாழ்வான். ஒழுக்கத்தை இழந்து உயிரைக் காப்பாற்றிக் கொண்டவன் உள்ளபடியே உயிரோடு இருப்பினும் **நல்ல பிணமாய்** நடந்து திரிவான். ஆதலின் காப்பாற்ற வேண்டிய முதல் நிலையில் நிற்பது உயிரல்ல; ஒழுக்கம் என்ற உண்மையை 'உயிரினும்' என்பது உய்த்துணரச் செய்கிறது.

ஒருவன் உயிரை இழந்து விட்டால் அதற்காக அழுது வருந்தும் துன்ப நிலை அவனுக்கு ஏற்படுவதில்லை; அந்நிலை பிறருக்கே ஏற்படும். ஆனால், ஒழுக்கத்தை இழந்து விட்டால், அதற்காக அழுது வருந்தும் துன்ப நிலை பிறருக்கு ஏற்படுவதில்லை; அந்நிலை அவனுக்கே ஏற்படும்! என்ற இச்சிறந்த கருத்தை வள்ளுவர் 'உயிரினும்' என்ற சொல்லிற்குள் அழுது, வருந்திப் புகுத்தியிருக்கிறார் என்பதைக் காணும்பொழுது, நமது நெஞ்சமும் நெகிழ்ந்து, வருந்தி, உருகுகிறது.

உயிர் தன்னையுடைய எவர்க்கும் உயர்வு தாழ்வு கற்பித்துக் கொண்டே இருக்கிறது. ஒழுக்கம் அவ்வாறில்லாமல் தன்னையுடைய எவர்க்கும் ஒரே சிறப்பைச் சமமாகத் தந்து வருகிறது. ஆதலின், ஒழுக்கம் உயிரினும் சிறந்ததாகும் என்ற உண்மை 'உயிரினும்' என்ற சொல்லிற் புதைந்து காணப்படுகிறது.

உயிர் தன்னையுடையவனைத் தீவினையிலும் செலுத்தித் துன்புறுத்தலாம்... ஒழுக்கம் அவ்வாறு செய்யாமல் நல்வழியில் மட்டுமே செலுத்தி அவனுக்குப் பெயரும், புகழும், பெருஞ்சிறப்பும் தருகிறது. ஆதலின் ஒழுக்கம் உயிரினும் பெரிது என்ற இவ்வுண்மையை 'உயிரினும்' என்ற சொல் காட்டிக் கொண்டிருக்கிறது.

நமக்கு நற்றுணை நல்லவர் என்றும், பக்தர்க்கு நற்றுணை பரமன் என்றும் சொல்லக் கேட்டிருக்கிறோம். அம்மாதிரி **உயிர்க்கும்** ஒரு துணை இருக்கிறது. உயிர்க்கு ஒரு துணையும், உறுதுணையும் ஆவது உலகில் வேறு எதுவுமில்லாமல் **ஒழுக்கம்** ஒன்றே ஆகும். ஆதலின் உயிர்க்குத் துணையாகின்ற ஒழுக்கம் உயிரினும் சிறந்ததாகிறது என்ற இவ்வுண்மையை 'உயிரினும்' என்ற சொல்லால் அறிந்து மகிழலாம்.

உயிரை இழந்து விட்ட ஒருவன் உண்மையான பழியைக் கூட இழந்து விடுகிறான்! இது இவ்வுலகில் இன்றும் நாம் காணும் உண்மையாகும். ஆனால், ஒழுக்கத்தை இழந்து விட்ட ஒருவன் தான் செய்யாத பழி பாவங்களைக் கூடச் செய்யவில்லை என்று சொன்னாலும் உலகம் ஒப்பாது. ஆதலின், அவன் இல்லாத பழியையும் ஏற்க நேரிடும். ஆதலின் உயிரினும் சிறந்தது ஒழுக்கம் என்றாகிறது. இவ்வுண்மையை உயிரினும் என்ற சொல்லிற் கண்டு மகிழுங்கள்.

படி இல்லாமல் மாடியும் ஏறலாம், கால் இல்லாமல் நடந்து செல்லலாம். ஆனால், ஒழுக்கமில்லாமல் உயர்வடையவே முடியாது. ஆதலின் துன்பம், துயரம், வறுமை ஆகிய இடுக்கண்கள் எத்தனை வந்தாலும் சிறிதும் தளராமல் ஒழுக்கத்தைக் காப்பாற்றியாக வேண்டும். உயிரே போவதாயினும் அஞ்சாது, வீரத்தோடு நின்று போராடி, ஒழுக்கத்தைக் காப்பாற்றியாக வேண்டும் என்பது வள்ளுவர் பெருமானின் கருத்து.

இதுகாறும் கூறிய இவைகளைக் கொண்டு,

**"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்."**

என்ற குறளின் பெருமையும், உயிரினும் என்ற சொல்லின் சிறப்பும், உயிரின் தன்மையும், ஒழுக்கத்தின் உயர்வும் ஒருவாறு விளங்கியிருக்கலாம். இதுபோன்றே பிற குறள்களிலும் புதைபொருள்களைக் காணலாம். ஆகவே, நீங்கள் திருக்குறளைப் படியுங்கள். **புலவனாக விளங்க அல்ல; பேச்சாளியாக இருக்க அல்ல; ஒழுக்கமுள்ளவனாக நடக்கப் படியுங்கள்.** படித்து அதன்படி ஒழுகுங்கள்.


வாழட்டும் தமிழ்ப் பண்பு!

# 2.இருத்தல்

**முன்னுரை:**

தமிழ் ஒரு மொழி. இலக்கிய வளர்ச்சியும், இலக்கணக் கட்டுக் கோப்பும், பேச்சு வழக்கில் மக்கள் மன்றத்தில் நின்று நிலவும் வாழ்வியல் வளமும் பெற்ற மொழி. மொழி ஆராய்ச்சியில் கால்கோள் அமைத்து, பல்வேறு வகைப்பட்ட கலைகளைக் கற்றூண்களாக நிறுத்தி, எழுநிலை வளர்ச்சி என்னும் மாடங்கள் அமைத்து, தமிழின் வளத்தை வரையறைப் படுத்துவது இக்கட்டுரையின் நோக்கமன்று.


தமிழ் மொழியில் அமைந்த சொற்களை நான்கு வகைகளாகப் பிரித்திருக்கிறார்கள். பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என்பனவே அப்பிரிவுகளின் பெயர்களாக அமைந்துள்ளன. அவைகளுள் 'இருத்தல்' என்பது வினைச் சொல். 'இருத்தல்' என்ற வினைச் சொல்லின் அடிப்படைப் பொருளும், வழக்கியற் பொருளும், வாழ்வியற் பொருளும் பற்றி எடுத்துக்காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கம்.




சித்தாந்தசரபம்
பேராசிரியர் முனைவர்
வை. இரத்தினசபாபதி


**முதல்வினையும் துணை வினையும்**

நின்றான், ஓடினான் என்று கூறும்போது அவைகள் முழுமை வினைகளாக, முதன்மை வினைகளாக அமைந்துள்ளன. அவ்வாறே 'இருந்தான்' என்பதும் சங்கக் காலத்திலும் அதை ஒட்டிய கால அளவையிலும் முழுமை வினையாக, முதன்மை வினையாக இருந்த பெருமை உடையது தான்!



"ஒன்று அவன் தானே" என்று தொடங்கும் திருமந்திரப் பாடலில், ''தான் **இருந்தான்** உணர்ந்து எட்டே'' என்ற வரி அமைகிறது. இங்கே 'இருந்தான்' என்பது முழுமையும் முதன்மையும் பெற்ற வினை.

அடுத்து, 'எழுந்திருந்தான்' என்ற வழக்கினை நாம் பேசுகிறோம். எழுந்திருந்தான் என்பதன் பொருள் என்ன? எழுந்து, பின்னர் அமர்ந்தான் என்று பொருள் கூறுவதில்லை. எழுந்தான் என்பதே அதன் பொருள். இவ்வாறு பொருள் கொள்ளும்போது எழுந்தான் என்பது முதல் வினையும் முழுமை வினையுமாக அமைய, இருந்தான் என்பது துணை வினையாக அமைந்து விடுகிறது. சுருங்கக் கூறின், எழுந்திருந்தான் என்பதில் இருந்தான் என்பது பொருளற்ற சொல்லாகவே அமைந்து விடுகிறது. ஒரு வகை உரைநடை அழகுக்காக அல்லது பேச்சுநடை வளமைக்காகவே நாம் எழுந்திருந்தான் என்பதைக் கொள்ள வேண்டியிருக்கிறது.

### 'இருத்தலின்' இன்றைய நிலை

நண்பர் ஒருவர் நம் இல்லம் வருகிறார். வரவேற்கிறோம். வாருங்கள் இருங்கள் என்று கூற வேண்டும். வரவேற்பை அன்புடன் குழைத்துக் கூற வேண்டுமானால், 'வருக, அமர்க' என்று கூறுதல் வேண்டும். 'அமர்தல்' என்பதற்கு

'விருப்புடன் தங்கியிருங்கள்' என்பது பொருள். 'அமர்தல் மேவல்' என்பது தொல்காப்பிய நூற்பா. பொதுவாக உலக வழக்கில் என்ன கூறப்பெறுகிறது? 'வாருங்கள் உட்காருங்கள்' என்பனவே. உட்காருங்கள் என்பதன் உண்மைப் பொருள் தெரிந்தால் நாம் அதைக் கூற மாட்டோம்.

உட்கு+ஆர்தல் = உட்கார்தல். உட்கு என்ற சொல்லுக்கு அச்சம் (பயம்) என்பது பொருள். உட்காருங்கள் என்றால் அச்சத்தோடு இருங்கள் என்பதே உண்மைப் பொருள். வாருங்கள் என அழைத்து, அச்சத்தோடு, என் முன்னர் இருங்கள் என்று கூறி வரவேற்கலாமா? ''உட்கு அச்சம்; புரை உயர்வாகும்" என்பது தொல்காப்பிய நூற்பா.

### திருமுறைகளில் 'இருத்தல்' என்பதன் ஆட்சி

1)தமிழகத்துச் சைவத் திருக்கோயில்களில் அறுபத்து மூவர் திருவுருவத் திருமேனிகளை அமைத்திருப்பார்கள். அவர்களில் ஒருவர் மட்டும் அமர்ந்த கோலத்தில் இருப்பார். அவர் பேயார் எனப் பெறும் காரைக்காலம்மையார்.

காரைக்காலம்மையார் திருக்கயிலாயத் துக்குத் தலையால் நடந்து சென்றவர். அங்கே கூத்தப் பெருமானை – ஆடும் திருக்கோலத்தில் உள்ள பரம்பொருளைக் காண வேண்டும் என்று வேண்டினார். திருக்கயிலைக்கு இறைவனாகிய சிவன், கூத்தப் பெருமானை இங்கே காண இயலாது. மண்ணுலகில், தமிழகத்தில் உள்ள திருவாலங்காட்டில்தான் காண இயலும் என்று ஆற்றுப்படுத்தினான். மீளவும் தமிழகத்தின் திருவாலங்காட்டுக்கு வந்து, கூத்தப் பெருமானையும் அவன் ஆடும் திருக்கூத்தையும் கண்டு களித்தார். பின்னர் அவர், ஆடும் கூத்தப் பெருமானிடம் "ஆடும் மாநடம் கண்டு உன் அடியின் கீழ் **இருக்க** வேண்டும்" என வேண்டினார். அவ்வாறே கூத்தப் பெருமானும் வரம் தந்தான். அதனைச் சேக்கிழார் பெருமான், மடுத்த புனல் வேண்டினார் எனத் தொடங்கும் பாடலில் (பெரிய புராணம் 1786).

" ... .... .... குலவிய தாண்டவத்தில் அவர் எடுத்தருளும் சேவடிக் கீழ் என்றும் **இருக்கின்றாரை** அடுத்த பெருஞ்சீர் பரவல் ஆரளவாயினத்தம்மா'' என்று எடுத்தருளியிருக்கின்றார். மேலும் அடுத்த பாடலில்,

**ஆதியோடு அந்தம் இல்லான்**
**அருள் நடம் ஆடும்போது**
**கீதம் முன் பாடும் அம்மை**

என்று சேக்கிழார் குறிப்பிட்டருளுகின்றார்.

''கீதம் முன் பாடும் அம்மை'' என்ற தொடருக்கு, இறைவன் முன் என்று உரை கொள்வது பொது வழக்கு. கீதம் என்பதற்குத்

திருமுறைப் பதிகங்கள் எனவும் பொருள் கொள்ளலாம். அவ்வகையில் திருநெறிய தமிழ் எனப் பெறும் திருமுறைப் பதிகங்களை முதன் முதலிற் பாடியவர் அம்மையாரே எனவும் கொள்ளலாம்.

மேலே எடுத்துக் காட்டிய வகையில் 'இருத்தல்' என்பதை முதன்மை வினைச் சொல்லாக எடுத்தாண்டவர் காரைக்காலம்மையார் என்று கொள்ளலாம்.

2) திருமூலர் அருளிய திருமந்திரம் தமிழ் மூவாயிரம் எனப் பெறும். திருமந்திரம் பத்தாந் திருமுறையாகக் கொள்ளப் பெற்றிருக்கிறது. திருமந்திரத் தமிழின் முதற்பாடல் **"ஒன்றவன் தானே"** என்ற தொடக்கம் உடையது.

"ஒன்று அவன் தான்; இரண்டு அவன் இன்னருள்" என்று அருளிய திருமூலர் இறைவனின் செயல்களாக ஆறு வினைமுற்றுகளை எடுத்துக் குறிப்பிட்டருளு கின்றார். அவைகள் முறையே

**நின்றனன்** மூன்றினுள்
நான்கு **உணர்ந்தான்**
ஐந்து **வென்றனன்**
ஆறு **விரிந்தனன்**
ஏழ் உம்பர்ச் **சென்றனன்**
தான் **இருந்தான்**
என அமைந்துள்ளன.

ஏழு நிலைகளில் நின்று, பின்னர் அவைகளைக் கடந்து தனித்து இருந்தான் என்பது பொதுப் பொருள். ஏழ் உம்பர்ச் சென்றனன் என்ற தொடருக்குப் பல்வேறு பொருள்களை உரையாசிரியர்கள் விரித்து எழுதியிருந்தாலும் ஏழு நிலைகளில் இருந்து, பின்னர் அவைகளைக் கடந்து தனித்து இருந்தான் என்ற பொதுப் பொருளை நாம் எடுத்துக் கொள்ளலாம்.

பிரமன் உலகம், விட்டுணு உலகம், உருத்திர உலகம், மகேசுர உலகம், சதாசிவ உலகம், சத்தி உலகம், சிவ உலகம் என்னும் ஏழு உலகங்களிலும் இருந்து அவைகளை முறைப்படி இயங்குமாறு இயக்கியதோடு, அவைகளைக் கடந்து, தனித்தும் இருந்தான் என்று பொருள் கொள்ளுவர். இங்கே இருத்தல் என்பதற்கு எல்லாவற்றோடும் கலந்து நின்ற பரம்பொருள் அவைகளைக் கடந்த, **தனித்து இருந்தது** என்று பொருள் கொள்ளுதல் வேண்டும்.

எனவே திருமூலர் வாக்கில் அமைந்த 'இருந்தான்' என்பது பரம்பொருளின் உண்மை நிலையாகிய **தனித்து இருத்தலைக்** குறித்தது என்று கொள்ளலாம்.

மேலே கூறப் பெற்ற கருத்தைத் தத்துவ இயல் – மெய்ப் பொருளியல் விளக்கமாகக் குறிப்பிட வேண்டும் என்றால் பரம்பொருள் அனைத்து நிலைத் தெய்வங்களோடு உடனிருந்து, அவைகளைச் செயற்படுத்தும் நிலையினின்றும், இன்னும் சொல்லப் போனால், சத்தியோடு கூடிச் செயற்படுதலையும் தவிர்த்து – கடந்து தானே தானேயாய் இருத்தல் என்று பொருள் கொள்ளுதல் வேண்டும்.

3) மணிவாசகப் பெருமான் தாம் அருளிய திருவாசகத்துக் கோயில் மூத்த திருப்பதிகத்தினுள் முதற்பாடல் கீழ்க்கண்டவாறு அமைகிறது.

**"உடையாள் உன்தன் நடு இருக்கும்
உடையாள் நடுவுள் நீ இருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்பது ஆனால் அடியேன் உன்
அடியார் நடுவுள் இருக்கும்
அருளைப் புரியாய்,
பொன்னம்பலத்துஎம்
முடியா முதலே! என் கருத்து
முடியும் வண்ணம் முன்னின்றே"**

என்பதே அப்பாடல்.

உலகமுழுதுடையாள் என்ற கருத்தில் உமையம்மையை, உடையாள் என்று குறிப்பிட்ட மணிவாசகப் பெருமான் இறைவனை "உடையான்" என்ற சொல்லால் இப்பாடலிற் குறிப்பிடவேயில்லை.

சத்தியின் நடுவில் சிவம்; சிவத்தின் நடுவில் சத்தி. இருவீரும் அடியேனாகிய என் நடுவில் இருப்பது முற்றிலும் சத்தியம் என்று கூறும் மணிவாசகப் பெருமான், தான் இங்கே குறிப்பிடப் பெற்ற மூவகை இருப்புகளையும் அனுபவிக்க வேண்டுமானால், என்னை உன்னுடைய அடியார் நடுவுள் இருக்குமாறு

செய் என்று வேண்டுகின்றார்.

இத்திருவாசகப் பாடலின் கருத்தைத் தெளிவாக உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். சத்தியைத் தன்னுள் இருக்க வைத்துச் செயற்படுதல் முதல் வகை. சத்தியினுள் சிவமாகிய தான் இருந்து செயற்படுதல் இரண்டாம் வகை. சிவமும் சத்தியும் இணைந்து, ஆன்மாவினுள் இருந்து செயற்படுதல் மூன்றாம் வகை. இத்தகைய மூன்று வகை இருப்பையும் கடந்து நிற்பது என்று பொருள் கொள்ளக்கூடாது. கலந்து நின்று செயற்படுதற்கென்றே அமைத்துக் கொண்ட இருப்பு என உணர்தல் வேண்டும்.

மேலும், மணிவாசகப் பெருமான், தன்னை இறைவன் ஆட்கொண்ட முறையைப் பற்றிக் கூறும் போதும்,

**"என்னையும் இருப்பது ஆக்கினன்"**

(திருவாசகம், திருஅண்டப் பகுதி 179 ஆம் வரி) என்று குறிப்பிடுகின்றார்.

இருப்பதாக்குதல் என்பது மணிவாசகர் பெற்றபேறு. காலம் கடந்து, மல வாசனைகள் கடந்து, இறையருள் இன்பத்தில் ஆழ்ந்து, ஆடாமல் அசையாமல், இருந்ததனை (ஆன்மாவை) இருந்தபடி, இருந்து கண்டும் காட்டியும், அனைத்துயிர்களுக்கும் அருள் வழங்கிக் கொண்டிருக்கும் நிலையை மாணிக்கவாசகர் பெற்றார் என்று கொள்ளலாம். இறவாமை பெற்றதோடு, தன்னையும் தன் தலைவனையும் முழுமையாக உணர்ந்து இன்புற்று இருக்கும் நிலையே அது. அத்தகைய நிலையை **"இருப்பது ஆக்குதல்"** என்றார் மாணிக்கவாசகர்.

இற்றைச் சமுதாயத்தில் வாழும் சாதாரணத் தனிமனிதன் நடத்தல், உண்ணுதல் போன்ற செயல்களைச் செய்தாலும் இவ்வகைச் செயன்பாடுகளில் ஈடுபடும் தன்னையும், தன் இருப்பையும் தனித்து நிறுத்தித் தெரிந்து கொள்ளுதல் இல்லை. அவன் தன் இருப்பை உணர்ந்து, தான் ஒரு தனிப் பொருள் என்பதை அறிந்து தன்னை இயக்கிக் கொண்டே தன்னுள் இருக்கும் பொருளையும் அப்பொருள் தரும் இன்பம் முதலிய அனைத்தையும் அனுபவித்துணர்ந்து கொண்டே தனித்து இருக்கும் நிலையை உணர்த்த வந்த குறியீட்டுச் சொல்லே.

**'இருப்பது'**

என்பது. 'இருப்பது' என்னும் நிலை பற்றி வள்ளற் பெருமான் அருளிய கருத்தை இங்கே இணைத்துக் காணலாம்.

வள்ளற் பெருமானார் ஆளுடைய அடிகள் (மாணிக்க வாசகர்) அருண்மாலையின் நாலாம் பாடல் கீழே கொடுக்கப் பெற்றுள்ளது.

**"உரு அண்டப் பெருமறை என்று**
**உலகமெலாம் புகழ்கின்ற**
**திரு அண்டப் பகுதி எனும்**
**திரு அகவல் வாய்மலர்ந்த**
**குரு என்று எப் பெருந்தவரும்**
**கூறுகின்ற கோவே! நீ**
**'இரு' என்ற தனி அகவல் எண்ணம்**
**எனக்கு இயம்புதியே"**

என்று அருளிச் செய்கின்றார். 'இரு' என்ற இரண்டெழுத்துச் சொல்லின் விரிந்த பொருளின் அகவலெல்லாம் எனக்குக் கூறுவாயாக என்பது அதன் பொருள்.

**முடிவுரை:**


தனி மனிதனின் ஆன்ம இயலின் வளர்ச்சியில், அனைத்தையும் கடந்து இறைவனுடன் கலந்து, அவன் தரும் ஆனந்தத்தை அறிந்தும், நுகர்ந்தும் அகிலத்துக்கெல்லாம் வழங்கியும் வாழும் ஒரு வகைக் கடந்த நிலையை உணர்த்த வந்த சொல்லே **'இருத்தல்'** என்பது. இதனை வள்ளற்பெருமான் கீழ்க்கண்ட மூவகை நிலைகளாகவும் எடுத்துக்காட்டி விளக்கியுள்ளார்.

பசித்து இரு
தனித்து இரு
விழித்து இரு

என. அருணகிரிநாதரும், கந்தரநுபூதியில்

**"செம்மான் மகளைத் திருடும் திருடன்**
**பெம்மான் முருகன் பிறவான்**
**இறவான்**
**சும்மா இரு; சொல் அற என்றலுமே**
**அம்மா பொருள் ஒன்றும் அறிந்து**
**இலனே"**

என்று எடுத்துக்காட்டியுள்ளார். மேலும் விரிக்கிற் பெருகும். 'இரு' என்பது இறைவன் உபதேசிக்கும் மந்திரம். ●



## பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் நீதிக்கதை

# பயனுள்ள அறிவு

**ரா**ம சாஸ்திரி ஒரு மகா பண்டிதர். சாஸ்திரங்கள் எல்லாம் அவருக்கு மனப்பாடம். மிகத் திறமையாக வாதங்கள் புரிவதிலும் வல்லவராக இருந்தார்.

இந்தச் சிறிய தலையில் எப்படி இவ்வளவு அறிவுத்திறன் இருக்கக்கூடும் என்று அந்தக் கிராமத்துப் பாமர மக்கள் அதிசயித்தனர். ராம சாஸ்திரிக்குத் தன் அறிவுத் திறனில் அளவிற்கு மீறிய கர்வமும் இருந்தது.

ஒரு நாள் ஆற்றின் மறுகரையில் அமைந்துள்ள ஒரு சிற்றூரில் வாதப்போர் ஒன்று நடைபெற இருந்தது. வெற்றி பெற்றவருக்கு பெரும் பரிசு வழங்கப்படும் என்று அறிவித்திருந்தார்கள். அதனால் வாதத்தில் கலந்து கொள்ள பண்டிதர் விரும்பினார். எனவே, படகுத் துறைக்கு வந்து சேர்ந்தார். ஓடக்காரனைக் கூப்பிட்டார் வெகுநேரம் அவனோடு வாதாடி 25 பைசாவுக்கு ஓடக்காரனைச் சம்மதிக்க வைத்து பின் ஓடத்தில் ஏறி அமர்ந்தார்.

ஓடத்தில் பயணம் செய்பவர் அவர் ஒருவர்தான். பொழுதைக் கழிக்க வேண்டுமே என்பதற்காக ஓடக்காரனோடு பேச்சுக் கொடுக்கலானார்! பல சாத்திரங்களைத் தான் கற்றது பற்றிப் பெருமை பேசினார். கற்றோர் பலரை வாதத்தில் தான் வெற்றி கொண்டதைக் கூறினார். 'அன்பனே! எவ்வளவு சாஸ்திரங்களைப் படிக்க முடியுமோ அவ்வளவையும் படித்தறிவதுதான் நம் வாழ்வின் குறிக்கோளாகும்' என்று கூறிவிட்டு, பிறகு ஓடக்காரனைப் பார்த்து, 'என்னென்ன சாஸ்திரங்களை நீ கற்றிருக்கிறாய்?' என்று கேட்டார்.

மிகப் பணிவுடன் ஓடக்காரன் தான் கல்வியறிவு இல்லாதவன் என்றும், ஆனால், தினமும் இறைவனை வழிபட்டு வருவதாகவும் கூறினான்.





'அது போதாது, வேதங்களைப் படித்திருக்கிறாயா?' என்று கேட்டார் பண்டிதர், பதிலுக்கு அப்படி ஒரு பெயரைக் கூடத் தான் கேட்டதில்லை என்று கூறினான் ஓடக்காரன்.

'அப்படியானால் நீ உன் வாழ்நாளில் கால் பகுதியை வீணடித்து விட்டாய். வேத விற்பன்னர் ஆவதற்கு நான் பத்து வருடங்கள் எடுத்துக் கொள்ள வேண்டியிருந்தது. போகட்டும், பகவத் கீதையையாவது படித்திருக்கிறாயா? என்று பண்டிதர் கேட்க, ஓடக்காரன் வெட்கமடைந்து தலையைத் தொங்கப் போட்ட வண்ணம், 'ஐயா! கீதையைப் பற்றி நான் ஒன்றும் அறியேன்' என்றான். பண்டிதர் நமுட்டுச் சிரிப்புடன், 'அப்படியானால் உன் வாழ்க்கையில் பாதி நாட்களை வீணாக்கி விட்டாய்," என்றார்.

சில நிமிடங்கள் சென்றன. பண்டிதர் மீண்டும் ஓடக்காரனைப் பார்த்து, 'சரி. ராமாயணம், மகாபாரதம் இவற்றையாவது படித்திருக்கிறாயா? என்று கேட்டார். ஓடக்காரன் பதிலே பேசவில்லை.

'அப்பா! உனக்காக நான் வருத்தப்படுகிறேன். நீ உன் வாழ்வின் முக்கால் பகுதியை வீணாக்கி விட்டாய். எஞ்சியுள்ள கால் பகுதி காலத்திலாவது தெய்விக விஷயத்தைக் கற்றுக் கொள்ள முயற்சி செய்' என்றார் பண்டிதர். ஓடக்காரன் வருத்தத்தோடு காணப்பட்டான்.

இப்படி இவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போது புயல் வீசத் தொடங்கியது. படகு புயற்காற்றில் கவிழ்ந்து விடுவது போல் ஆடியது. ஓடக்காரன் பண்டிதரை நோக்கி இரு கைகளையும் குவித்து வணங்கி, 'ஐயா! இந்தப் படகிலிருந்து குதித்து வெளியேறி விட வேண்டும். உங்களுக்கு நீந்தத் தெரியுமல்லவா?' என்று கேட்டான்.

பண்டிதருக்குத் தூக்கிவாரிப் போட்டது. 'இல்லை. என்னால் சிறிதுகூட தண்ணீரில் நீந்த முடியாது. நீச்சல் கற்றுக் கொள்ள எனக்கு நேரமே இருக்கவில்லை,' என்றார்.

'ஐயா! உங்களுக்கு நீச்சல் தெரிந்தால் தான் இப்போது உங்களை நீங்கள் காப்பாற்றிக் கொள்ள முடியும். உன்னதமான நூல்களைக் கற்காமலே என் வாழ்வின் முக்கால் பகுதியை வீணடித்து விட்டேன் என்பது உண்மைதான். எனக்கு நீந்த மட்டுமே தெரியும். இது இப்போது என் உயிரைக் காப்பாற்றும். நீச்சல் உங்களுக்கு தெரியாது என்பது பரிதாபத்திற்குரியதே. உங்கள் வாழ்நாள் முழுவதையுமே வீணடித்துக் கொண்டு விட்டீர்களே' என்றான் ஓடக்காரன்.

வாழ்க்கைக்குப் பயன்படுவது தான் கல்வி. ஆடம்பரத்திற்கு உதவுவது கல்வியே அல்ல. உண்மையான கல்வி பணிவினைத் தோற்றுவிக்குமே தவிர ஆணவத்தைத் தராது. ●

# சர்வ தந்திர சுதந்திரர்

**திவ்யதம்பதிகள்**

''எல்லாக் கலைகளிலும் வல்லவர்' என்பதுதான் நம் தலைப்பின் பொருளாகும். இப்படியொரு பட்டப் பெயர் எவரிடமிருந்து பெற்றார்? எவர் பெற்றார்? என்றால், உலகநாயகி ஸ்ரீரங்கநாச்சியார் தான் விருதை அளித்தவர். வேதாந்தசார்யர் ஸ்வாமி தேசிகரே அதைப் பெற்றவர். தாயார் இந்த விருதை அளிக்கும் வரை ஸ்ரீரங்கநாதர் – பெரிய பெருமாள் காத்திருப்பாரா? இதற்கு முன்பே **'வேதாந்தசாரியார்'** என்ற விருதை அளித்து விட்டார். இப்படித் திவ்யத் தம்பதிகளால் போட்டி போட்டுக் கொண்டு பட்டப் பெயரளிக்கும்படி ஸ்ரீதேசிகர் என்ன சாதித்திருந்தார்?

கதாகாலட்சேபம் சாதிப்பதில் கெட்டிக்காரர். பலப்பல நூல்களை வேதாந்தத்தைப் பிரசாரம் செய்து இயற்றியிருந்தார். இதெல்லாம் ஸ்ரீவைணவத்தை மட்டுமின்றி வேத தத்துவத்தைச் சரியா[illegible] பரப்பவும் வேத முதல்வனான ஸ்ரீமந் நாராயணரின் புகழைப் பரப்பவும் ஆகும். இதுவே உலக நன்மைக்குத் தானே?

வைணவ சமயம் ஸ்ரீராமாநுஜர் காலத்திற்குப் பிறகு மிகவும் பாதுகாப்பாற்றிருந்தபோது ஒரு நாற்பதாண்டுக் காலம் ஸ்ரீமத் நிகமாந்த மஹா தேசிகரே ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளியிருந்து பாதுகாவலிட்டார்.

திவ்யத் தம்பதிகளின் திவ்யாசியுடன் வேதாந்த சிங்கமாகத் திகழ்ந்த மஹானின் வரலாற்றைப் பார்ப்போம்.

**திருவவதாரம்**

பிறவிக் கடலுள் மூழ்கித் தத்தளிக்கும் ஜீவர்களை உய்விக்கத் திருவுள்ளங் கொண்ட பகவான் தானே அவதாரங்களை எடுத்தான். வேதத்தை வெளியிட்டான். ஆசார்யர்களை உருவாக்கினான். நம்மாழ்வார், நாத முனிகள், ஆளவந்தார், ஸ்ரீராமாநுஜர், இவர்களின் நூல்களால், பிரசாரத்தால்



ஸ்வாமி

வைதிக மத அருமை பெருமைகளை மக்களுணர்ந்தனர்.

இவ்வாறு பெருமை பெற்ற கொள்கை, ரகசியப் பொருள் மேலும் விரிவாக அறியவும், பிற மதத் தத்துவத் தவறுகளைத் தெளிவாகக் காட்டி உபய வேதாந்தத்தைக் காக்கவும் மேலும் ஓர் அவதார புருஷர் ஆசார்யராக வர பகவான் தீர்மானித்தான்.

இக்காரணத்தால் ஸ்ரீவேதாந்த தேசிகருடைய அவதாரம் ஸ்ரீவேங்கடநாத பகவானின் கண்டாமணியம்சமாக பூமியில் நிகழ்ந்தது. சுமார் 700 ஆண்டுகளுக்கு முன் புரட்டாசி மாதத் திருவோண நாளில் திருவேங்கட முடையானின் திருவவதார தினத்திலேயே நடந்தது. இதனால் ஸ்ரீவேங்கடேசன் என்றே திருநாமம் இவருக்கு ஏற்பட்டது. இவர், ஸ்ரீ அநந்தசூரிக்கும், அவர் பத்னி தோத்தாரம்மாவிற்கும் பிள்ளையாகப் பிறந்தார். வளர வளர இக்குமாரருக்கு முறைப்படி எல்லாம் நடந்தன. திருத்தண்கா கோயிலருகில் தூப்புல் எனும் தூய ஊரில் அவர் பிறந்து வளர்ந்து வந்தார்.

**பெரியோராசி**

தர்சனப் பிரவர்த்தகராகத் திகழ்ந்த பிள்ளை உலகாசாரியரும், சிறுபிள்ளையாய் ஸ்ரீதேசிகரைப் பார்த்துவிட்டு 'அவனே இவர்?' என்று அதிசயித்தார் என்பர். இது ஸ்ரீ ராமாநுஜரை 'ஆ... முதல்வர்' என்று ஸ்ரீஆளவந்தார் ஆசீர்வதித்தது போல.

ஸ்ரீதேசிகரின் மாமா கிடாம்பி அப்புள்ளார். இவர் நடாதூரம்மாளின் காலட்சேபத்திற்கும் குழந்தையை அழைத்துப் போனார். கோஷ்டியில் இருந்த அனைவருக்கும் குழந்தை தேசிகன் தேஜஸ் பிடித்துப் போனது. 'பிரும்மதேஜஸை அவர் திருமுகத்தில் கண்ட நடாதூரம்மாள், அருகிலழைத்து அணைத்து 'எம்பெருமானார் தர்சனத்தை' நிலை நிறுத்த வல்ல அவதாரமாகக் கண்டு வாழ்த்தினார்.

"பிற மதங்களைக் கண்டித்து விலக்கி நம் சித்தாந்தத்தைத் தூக்கி விளங்கச் செய்து புலமையுள்ள அறிஞர்களின் பெருமதிப்பைப் பெற்று எல்லா மங்களங்களையும் பெறுவாய்" என்றாசியளித்தார். அதோடு தம் சீடர் அப்புள்ளாரை அவருக்கு ஆசார்யராக நியமித்தார். அவரும் "அம்மாளாசிப்படி எல்லாப் பெருமையையும் பெறுக" என ஆசீர்வதித்தார்.

**கல்வி**

உபநயனம் செய்வித்து பஞ்சசம்ஸ்காரமும் பண்ணி அப்புள்ளார் ஸ்ரீதேசிகருக்கு வேதாத்யயநம், திவ்யப் பிரபந்தாத்யயனம் செய்வித்து, தர்க்கம், வியாகரணம் எல்லாம் பயில்வித்தார். தேசிகர், தம் முக்கிய ஆசார்யரான அப்புள்ளாரிடம் ரகசியப் பொருட்களைக் கேட்டார். ஸ்ரீகீதாபாஷ்யம், ஸ்ரீபாஷ்யம் (பிரும்ம சூத்ர ராமாநுஜரின் உரை), பகவத் விஷயம் (ஆழ்வாரருளிச் செயல்கள்) முதலிய ஆசார்யர் நூல்களைக் காலட்சேபம் கேட்டு முடித்தார். இவ்வாறு இருபது வயதிற்குள்ளேயே எல்லா சாத்திரங்களையும் கற்றுத் தேறினார். உபய வேதாந்தியானார். உபயவேதாந்தம் என்பது திராவிட வேதமான ஆழ்வார்கள் பிரபந்தமும், வடமொழி வேத, உபநிடத, கீதை முதலிய இதிஹாஸ, புராணங்களும் ஆகிய இரு வேதாந்தமும் ஆகும். அவருடைய மேதா விலாசம் கண்டு மெச்சாத வித்வான் களில்லை. அவருடைய மாமா அப்புள்ளார், ஸ்ரீமந் நாத முனிகள் மூலம் வந்து ஆளவந்தாரால் வளர்க்கப்பட்டு ஸ்ரீபாஷ்யக் காரரால் நிலைநிறுத்தப்பட்ட ஸ்ரீவிசிட் டாத்வைத சித்தாந்தத்தைப் பாதுகாக்க ஒரு சிறந்த அதிகாரி தேசிகர் என்று மகிழ்ந்தார். அதோடு தம் பரம்பரையில் வந்த கருடமந்திரத்தை ஸ்ரீதேசிகருக்கு உபதேசித்தார்.

**கல்யாணம்**

பகவத் பக்தி மிகுந்த, உயர் குலத்துப் பெண் 'திருமங்கை' என்ற கன்னிகையை ஸ்ரீதேசிகருக்கு அவர் பெற்றோர்கள் மணம் முடித்து வைத்தனர்.

தம் சித்தாந்தத்திலேயே கவனமாகப் பிரவசனம் செய்து வந்த தேசிகரின் இல்லறமும் சாத்திரப்படி நன்கு நடந்தது. அதோடு கருட மந்திர ஜபதியானத்துடன் திருவஹீந்தபுர ஔஷாத்ரி மலையில் ஏறி ஓர் அரச மரத்தடியில் யோகத்தைப் பயின்று வந்தார். திருவயிந்தரபுர தெய்வ நாயகப் பெருமாளையும், பிராட்டியையும்

மங்களாசாசனம் செய்தார்.

அதேசமயம் ஸ்ரீதேசிகர் புலமை கண்டு வியந்த பலர் அவரிடம் சீடராகினர். தத்துவ நூல்களைக் காலட்சேபமாகக் கேட்டனர். அவருடைய பத்தினி அவருடைய காரியங்களுக்கு ஒத்தாசை புரிந்தாள்.

**அப்புள்ளார் காலமானார்**

அவர் மாமாவும் முக்கிய ஆசார்யருமான அப்புள்ளார் தளர்ந்தார். ஸ்ரீதேசிகரை அழைத்து, ஸ்ரீபாஷ்யக்காரருடைய பாதுகைகளையும், பஞ்ச சம்ஸ்காரம் செய்ய தம்மால் பயன்படுத்தப்பட்ட திருவாழி திருச்சங்குகளையும் எடுத்துத் தந்தார். தம் திருவடிகளையும் அவர் திருமுடியில் வைத்தருளினார். பிறகு அவர் திருநாட்டிற்கு எழுந்தருளினார். அவர் பரமபதித்த பிறகு அவரிடம் பெற்றவற்றைத் தம் தினத் திருவாரா தனத்தில் வைத்தார்.

**யோகத்தில் சித்தி**

அவரால் யோகத்தில் மந்திர ஜபத்துடன் தியானிக்கப்பட்ட ஸ்ரீ கருடபகவான் அவருக்குப் பிரசன்னமானார். அவரை அனுக்ரஹித்து, பகவானை நேரில் தரிசிக்க உதவும் மந்திரமான 'ஸ்ரீஹயக்ரீவ' மந்திரோபதேசம் பண்ணிச் சென்றார்.

கருட பகவானிடம் பெற்ற மந்திரத்தை பல ஆவ்ருத்தி ஜபித்துத் தியானம் செய்து வரத் தொடங்கினார். அதனால் மகிழ்ந்த கல்விக் கடவுளான ஸ்ரீ ஹயக்ரீவப் பெருமாள், தேசிகர் முன் தோன்றினார். பிரவசன சக்தியும், ஞானமும் பெருகத் திருவுள்ளங் கொண்டு தம் வாயமுதத்தை அளித்து மங்களாசாசனம் செய்தார்.

பின்னால் ஸ்வாமி ஏகப்பட்ட சித்தாந்த நூல்களை எழுத அதுவே காரணம். கருட பஞ்சாசத், தேவநாயக பஞ்சாசத், அச்யுத சதகம் முதலிய துதிகளையும், மும்மணிக் கோவை, நவமணி மாலை முதலிய தமிழ் நூல்களையும் செய்தார்.

அவ்வூரிலேயே பிரவசனம் செய்தபடி நெடுநாளிருந்தார்.

**யாத்திரை**

முதலாழ்வார்கள் பாடிய திருக்கோவிலூர் வந்து திருவிக்ரமப் பெருமாளைச் சேவித்து 'தேஹளீசஸ்துதி' துதிபாடி பேரருளாளன் –பெருந்தேவியைச் சேவித்துப் பாட காஞ்சிபுரத்துப் பெருமாள் கோயிலை வந்து சேர்ந்தார். இன்னும் பல துதி நூல்களைச் செய்து, பல திவ்ய தேசப் பெருமாள்களைச் சேவித்து ரகசிய நூல்கள் பல இயற்றிக் கொண்டு காஞ்சியிலேயே சில காலமிருந்தார். ஸ்ரீபாஷ்யக்காரருக்கு சரச்வதிதேவி அளித்த ஹயக்ரீவர் விக்ரஹம் அப்புள்ளார் சந்நிதியால் கிடைக்க தம் திருவாராதனத்தில் சேர்த்துக் கொண்டர்.

பிறகு திருமலை சென்று திருவேங்கடமுடையானைச் சேவித்தார். 'த்யாசதகம்' என்ற நல்ல நூலை எழுதினார்.

அப்புறம் வடநாட்டு யாத்திரை கிளம்பினார். பெரிய யாத்திரையாகக் கிளம்பி பிருந்தாவனம், திருவயோத்தி, சாளக்ராமம், பதரியாச்ரமம் முதலிய மிகப் பல திவ்ய க்ஷேத்ரங்களைச் சேவித்துக் கொண்டு திரும்பி வந்து, திருவல்லிக்கேணி, திருவெவ்வுள் வழியே ஸ்ரீபெரும்புதூர் வந்து எம்பெருமானாரைக் கண்ணார சேவித்து மகிழ்ந்து காஞ்சீபுரம் எழுந்தருளினார். சித்தாந்தம் போதித்து வரலானார்.


**துறவியை வென்றார்**

இல்லறத்தாராகிய ஸ்ரீதேசிகரை, ஒரு வேற்று மதத் துறவி தாம் துறவி என்பதால் உயர்ந்தவர் என எண்ணி வாதம் செய்ய வந்தார். சகலமும் கற்றிருந்த ஸ்வாமியிடம் வாதிட வழியின்றித் தோற்றார். அவர் மந்திர வித்தை அறிந்தவர். ஸ்வாமிக்குக் கேடு செய்ய நினைத்து ஒரு குளத்து நீரை வயிறு முட்டக் குடித்தார். எதிர்க்கரையில் சம்பிரதாயம் போதித்துக் கொண்டிருந்த ஸ்வாமி தேசிகரின் வயிறு வீங்கிக் கொண்டு வலித்தது. எதிர்க்கரையில் அத்துறவியிருந்ததைக் கவனித்தவர் அத்துறவியின் துர்ச்செயலைப் புரிந்து கொண்டு விட்டார்.

உடனே எழுந்து அருகிலிருந்த கல் தூணில் நகத்தால் கீறினார். அதிலிருந்து தண்ணீர் பீய்ச்சியடித்தது. உடனே ஸ்வாமியின் திருவயிறு வடிந்து எப்போதும் போலாயிற்று. துறவி ஓடி வந்து அவர் காலடியில் விழுந்து மன்னிப்புக் கேட்டார்.

**(தொடரும்)**

# திருவான்மியூர் அம்பிகை



சங்கீதத்துக்குச் சுருதி போன்றதுதான் திருக்கோயில்களில் எழுந்தருளியிருக்கும் இறைவன் – இறைவியரின் திருநாமமும் அவற்றின் பொருளும். இந்தச் சங்கீதமும் தனது பொருளாகிய சுருதி பிசகக் கூடாதுதான்.

திருவான்மியூருக்கு ஞானசம்பந்தப் பெருமான் அருளிய தேவாரத்தில், அத்தலத் திருக்கோயிலின் அம்பிகை பெயராக 'தொக்கமாது' என்பது வருகிறது. இது ''திருவான்மியூர்த் தொக்கமாதொடும் வீற்றிருந்தீர் அருளென்சொலீர்' (திரு.ஞா.தே.2 ஆம் திருமுறை, 4ஆம் திருப்பதிகம் 8ஆம் திருப்பாசுரம்) என்று தேவார அச்சுப் பதிப்புக்களில் காணப்படுகிறது. பெரிய புராணத்தில் திருவான்மியூர் பற்றிச் சொல்லும் இரண்டு இடங்களிலும் அத்திருத்தலத்து அம்பிகையைப் பற்றிய குறிப்பு ஏதும் இடம் பெறவில்லை.

திருவான்மியூரில் எழுந்தருளியிருக்கும் அம்பிகையின் அருமையான தமிழ்ப் பெயர் ''சொக்கநாயகி'' என்பதாகும். திருவான்மியூர் பற்றிய பெரிய புராணத்தின் பின்பு வந்த மற்ற இலக்கியங்களிலும் அம்பிகையின் இந்த அருந்தமிழ்ப் பெயரே காணப்படுகிறது. எடுத்துக்காட்டாக டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல் நிலைய ஏட்டுச் சுவடியான "திருவான்மியூர்ச் சொக்கநாயகியம்மை விருத்தம்' என்னும் நூல், "வான்மியூர் வாழ்... சொக்கநாயகி அன்னையே!" என்னும் மகுடம் பெற்று முடிகிறது. அஷ்டாவதானம் பூவை கலியாணசுந்தர முதலியார் இயற்றியதும் 19ஆம் நூற்றாண்டில் பதிப்பிக்கப் பெற்றதுமான திருவான்மியூர் புராணத்திலும் அத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் சொக்கநாயகி துதியாக ஒரு செய்யுள் உள்ளது.

'சொக்கநாயகி'யைச் 'சொக்கமாது' என்றும் இலக்கிய வழக்கில் சொல்லலாம். எனவே, திருவான்மியூருக்கு ஞானசம்பந்தர் அருளிய தேவாரத்தில், "திருவான்மியூர்ச் சொக்கமாதொடும் வீற்றிருந்தீர்" என்றிருப்பதே சரியான பாடமாக இருக்கலாம். திருவான்மியூருக்கு ஞானசம்பந்தப் பெருமான் அருளிய தேவாரத் திருப்பதிகத்தின் மூலச் சுவடியில், ''திருவான்மியூர்ச் சொக்கமாதொடும் வீற்றிருந்தீர்''



என்னும் பாடமே காணப்படின் அழகுக்கு மேலும் அழகூட்டுவதாகவே அமையும். காலத்தால் மிகவும் பிற்பட்ட தேவாரச் சுவடியொன்றே அடியேன் சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் காண நேர்ந்தது. அதிலும் 'தொக்கமாது' என்னும் பாடமே காணப்பட்டது.

14–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஸ்ரீ உமாபதி சிவாச்சாரிய சுவாமிகள் தமது 'சிவக்ஷேத்திர சிவநாமக் கலிவெண்பா'வின் 268ஆம் கண்ணியில்,


**"வான்மியூர் மேவும் வளர்சுந்தரமாதின்**
**பான்மே வியமருந்தே பால்வண்ணா"**

என்று பாடியுள்ளார். தேவார அச்சுப் பதிப்புகளில் காணப்படும் 'தொக்கமாது' என்னும் பாடம் மேற்கண்ட கண்ணியில் வரும் 'சுந்தரமாது'டன் பொருள் பொருந்தி வரவில்லை. 'சொக்கமாது' என்பதே பொருள் பொருந்தி வருகிறது. சுந்தரமும் சொக்கும் அழகினைக் குறிக்கும் சொற்களாகும். 'அதிசுந்தரம்' என்று பொருள்படும் பேரழகுதான் 'சொக்கு' என்று வழங்கப்படுகிறது. எனவே, "திருவான்மியூர்ச் சொக்கமாதொடும் வீற்றிருந்தீர்" என்பதுதான் 'திருவான்மியூர்த் தொக்கமாதொடும் வீற்றிருந்தீர்' என்று பிழைபட்டு மாறியிருக்கலாம். இதில் இரண்டாம் அடியின் இறுதியில் வரும் 'சொலீர்' எனும் மோனைக்குத் தகுந்தாற் போலச் "சொக்கமாதொடும்" என்னும் எதுகை வருவதே பொருத்தமாக இருக்கும்.

ஸ்ரீ உமாபதி சிவாசாரியர் வாழ்ந்த 14ஆம் நூற்றாண்டில் தான் அச்சுப் புத்தகங்கள் இல்லையே! அந்தக் காலக்கட்டத்தில் திருவான்மியூருக்குத் திருஞானசம்பந்தர் அருளிய தேவாரத் திருப்பதிக ஏட்டுச் சுவடியில், "திருவான்மியூர்ச் சொக்கமாதொடும் வீற்றிருந்தீர்" என்னும் செம்மையான பாடமே காணப்பட்டிருக்கலாம். இதனால்தான் அவர், 'வான்மியூர் மேவும் வளர் 'சுந்தரமாது' என்று பாடியிருக்கிறார் என்று கருதலாம். "சொக்கு" என்னும் பேரழகைச் சார்ந்து அன் 'விகுதி' பெற்று வரும் சொக்கன் என்னும் அருந்தமிழ்ப் பெயரின் மீது ஞானசம்பந்தர் பெருமானுக்கு அளவில்லாத ஈடுபாடு உண்டு. ஆதலின் மிகவும் அருமையாக, "ஆலவாய்ச் சொக்கனே" என்று திருஆலவாய்த் தேவாரத்திலும் பாடியருளினார். எனவே, திருவான்மியூர் அம்பிகையையும் அவ்வூர் இறைவனையும் இணைத்து முன்னிலைப்படுத்தி ''திருவான்மியூர்ச் சொக்கமாதொடும் வீற்றிருந்தீர்" என்று பாடியிருக்கலாமே!

"பைந்திருவான்மியூர் பால்வண்ணநாதர் சுந்தர நாயகி துலங்கிய சுந்தரம்' என்று 'சிவக்ஷேத்திர விளக்கம்' என்னும் ஏட்டுச் சுவடியில் காணப்படுகிறது. இதேபோன்று வான்மியூர் மருந்தீசுவரர் வன்மீகத்தியாகர், சுந்தரமாது "சொக்கநாயகி" என்று 'சிவஸ்தலக் குறிப்புக்கள்' என்னும் மற்றொரு ஏட்டுச் சுவடியிலும் 'திருவான்மியூர் அம்பிகை'யைக் குறித்த செய்தி வருகிறது. இவ்விரு சுவடிகளுமே டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல் நிலைய வெளியீடான 'திருத்தலங்கள் வரலாறு' என்னும் நூலில் பதிப்பிக்கப் பெற்றுள்ளன. 19ஆம் நூற்றாண்டில் வெளியிடப் பெற்ற தேவார அச்சுப் பதிப்புகளில் காணப்படும் திருவான்மியூர் அம்பிகையின் திருநாமம்; சுந்தரமாது அல்லது சொக்கநாயகி, சுந்தரநாயகி.

திருவான்மியூர் அம்பிகையின் திருப்பெயர் இன்னதுதான் என்று கல்வெட்டுச் சான்றாகச் செய்தி எதுவுமே கிடைக்கவில்லை. ஆயினும் ''கங்கை கொண்ட சோழன் என்னும் இராஜேந்திர சோழன் என்னும் இராஜேந்திர சோழன் திருவான்மியூர்க் கோயில் திரிபுர சுந்தரிக்குத் திருவிளக்கு ஏற்றவும் பொன், நெல், ஆடுகளையெல்லாம் தானம் வழங்கியிருக்கிறான்' என்று தமது 'வேங்கடம் முதல் குமரி வரை' என்னும் நூலின் முதற்பகுதியில் 21ஆம்



**எஸ்.சாயிராமன்**
டாக்டர் உ.வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை.90

கட்டுரை (ப.190–191)யாகிய 'வான்மியூர்ப் பால்வண்ணர்' என்பதில் திரு.தொ.மு.பாஸ்கரத் தொண்டைமான் எழுதியிருக்கிறார்.

திருக்கழுக்குன்றத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் அம்பிகையை, 'திருமலைச் சொக்கநாயகி' என்றும் 'திருமலைச் சொக்கி' என்றும் வழங்கி வருகின்றனர். 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அந்தகக் கவிவீரராகவ முதலியார் பாடிய திருக்கழுக்குன்றப் புராணத்தில், "மஞ்சொக்க வளர் அளக மலைச் சொக்க நாயகியை வணக்கம் செய்வோம்'' என்று வருகிறது. இந்த அம்பிகையையே "திரிபுர சுந்தரி" என்றும் வழங்குகின்றனர். திருவான்மியூர்ப் புராணத்தில் 'சொக்கநாயகி துதி'யின் பின்பே திரிபுரசுந்தரி வணக்கமாக ஒரு பாடல் வருவதும் குறிப்பிடத்தக்கது. திருவான்மியூரில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் சொக்கநாயகியும் "திரிபுர சுந்தரி" தானே!

சற்றே பொறுங்கள்! கட்டுரை இன்னும் முடியவில்லை.

அடியேன் சொல்லுகிறேன் ''திருவான்மியூர்ச் சொக்கமாதொடும் வீற்றிருந்தீர்!'' என்பதுதான் சரியான பாடமாக இருக்கலாம் என்று! நான் சொன்னால் மட்டும் போதுமா? மாபெருந்தமிழ்ச் சான்றோர் ஒருவரும் எனக்கு முன்பே இத்துறையில் ஆராய்ச்சி செய்திருக்கிறார் என்பதைத் தெரிவிப்பதே தெளிவாகும். எனது சிந்தையில் 'தொக்கமாது' என்பது சரியான பாடம் அன்று, 'சொக்கமாது' என்பதே சரியாக இருக்கும் என்ற எண்ணம் தர்க்க ரீதியாகத்தான் நெருடிக் கொண்டிருந்தது. 'தோலும் துகிலும்' என்னும் திருவாசகப் பாடலில் 'தொக்கவளை' என்பதற்குக் கொடுக்கப்பட்ட பொருள், கூட்டமான (தொகுதியான) வளை என்பதாகும்.

எனவே, அழகினைக் குறிக்கும் பொருளமைதி 'தொக்க' என்னும் சொல்லாட்சியில் இடம் பெறவில்லை என்றும் தெரிகிறது. இதனால் டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல் நிலையத்தில் உள்ள தமிழ்த் தாத்தா அவர்கள் பயன்படுத்தி தமது திருக்குறிப்புக்களையும் திருத்தங்களையும் எழுதி வைத்துப் பதிவு செய்த பழமையான தேவாரப் பதிப்புக்களையும் பார்வையிடலானேன்.

தமது திருவுள்ளத்தையும் திருப்பணியையும் ''சிவபக்திக்கும்'', ''தமிழ்த் தொண்டுக்குமே'' அர்ப்பணித்த தமிழ்த் தாத்தா டாக்டர் ஐயரவர்கள் பொன், மணி ஆகிய அனைத்திலும் உயர்ந்ததான மிகவும் அருமையான திருக்குறிப்புக்களை எழுதிப் பதிவு செய்திருக்கும் "மூவர் தேவாரம் ஸ்தலமுறை" (1881ஆம் ஆண்டு வெளியிடப் பெற்றது) என்னும் தேவாரப் பழம் பதிப்பைக் கண்டேன். அதில் திருஞானசம்பந்தர் திருவான்மியூருக்கு அருளிய தேவாரத் திருப்பதிகம் வரும் 1067ம் பக்கத்தில் "திருவான்மியூர்த் தொக்கமாதொடும் வீற்றிருந்தீர்" என்பதை, "திருவான்மியூர்ச் சொக்கமாதொடும் வீற்றிருந்தீர்'' என்று மிகவும் அருமையாக ஐயரவர்கள் திருத்தி எழுதியிருந்தார். ஆம்! தமிழ்த் தாத்தா அவர்களுக்கு இந்த அருமைச் சிந்தனை பல்லாண்டுகளுக்கு முன்பே ஏற்பட்டிருந்தது குறிப்பிடத்தக்க சிறப்புக்குரியது. "தக்கில் வந்த" எனத் தொடங்கும் இந்தத் தேவாரப் பாசுரம் தான் ஐயரவர்களின் திருத்தம் பெற்றுத் "திருவான்மியூர்ச் சொக்கமாதொடும் வீற்றிருந்தீர்" என்று மாசு நீங்கி மெருகூட்டப் பெற்று இன்று புத்தம் புதிதாகப் பொலிகிறது.

**திருக்கழுக்குன்றத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் அம்பிகையை, 'திருமலைச் சொக்கநாயகி' என்றும் 'திருமலைச் சொக்கி' என்றும் வழங்கி வருகின்றனர்.**

"திருவான்மியூர்ச் சொக்கமாதொடும் வீற்றிருந்தீர்" என்பதே சரியான பாடமாக இருக்கலாம் என்று நான் கொண்டிருந்த ஊகமும், தமிழ்த் தாத்தா அவர்களின் அருமைத் திருக்குறிப்பினால்தான் உறுதி பெற்றுப் பெருமை பெற்றது. வெளியுலகின் வெளிச்சமே இன்னும் படாத "சொக்கமாது" என்னும் அருமைப் பாடத்திற்கு ஐயரவர்களால் தான் இன்று வெளிச்சம் கிடைத்திருக்கிறது.

இதுபோன்று இன்னும் வெளியுலகுக்குத் தெரியாததும் வெளிச்சத்துக்கு வராதுதமான எத்தனை பாடங்கள் "தமிழ்த் தாத்தா" அவர்களால் கண்டறியப்பட்டனவோ!

"தக்கில் வந்த தசக்கிரிவன் தலை பத்திறத்
திக்கில் வந்தலறவ்வடர்த்தீர் திருவான்மியூர்ச்
சொக்கமாதொடும் வீற்றிருந்தீர்
அருளென்சொலீர்
பக்கமே பல பாரிடம் பேய்கள் பயின்றதே."

– **திருஞானசம்பந்தர்.**

# திருவாசகத்தேன்

ப.முத்துக்குமாரசுவாமி

**"தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக்கி**
**அல்லல் அறுத்து ஆனந்தம் ஆக்கியதே –எல்லை**
**மருவா நெறியளிக்கும் வாதவூர் எம்கோன்**
**திருவாசகம் என்னும் தேன்."**
**–திருவாசக நூற் சிறப்பு வெண்பா.**

அமிழ்தினும் இனிய மொழி தமிழ் மொழி. தமிழ் செம்மொழி. சொல், எழுத்து, பொருள் என மூவகை நிலைகளுக்கும் இலக்கணம் கண்ட மொழி. உலக மொழிகளுள் மூத்த மொழி. நாகரிகம், பண்பாடு, கலை, இலக்கியம் போன்ற பல்வேறு துறைகளில் மற்றைய மொழிகளில் இல்லாத செம்மை சார்ந்த நெறிகளும், படைப்புகளும் ஏராளம் இருந்தன. அவற்றில் சரி பாதி கடற்கோள்களால் அழிந்து போயின. பல அந்நியர்களது படையெடுப்பால் சிதைந்து போயின. இன்னும் சில களவாடப்பட்டு கடல் கடந்து சென்று விட்டன. நம் கையில் இன்றைக்கு இருக்கின்ற இலக்கியங்கள் மிக மிகக் குறைவுதான். பழந்தமிழர்கள் பத்திரப்படுத்தி வைத்த இலக்கிய கருவூலங்களில் நான்கில் ஒரு பங்கினைத்தான் இன்றைக்கு நாம் பார்க்க முடிகின்றது. தமிழ்மொழி இலக்கியங்கள் பல்வேறு துறைகளில் வளம் கொழித்து இருந்திருக்கின்றன. வாழ்வியல் இலக்கியங்கள், நீதிநெறிக் கொள்கைகள், முடியாட்சியின் மாண்பு, ஆன்மிகம் எனப் பல வகைகளில் உயர்ந்த நெறிகளை உணர்த்திக் காட்டிய இலக்கியங்களுக்கு இங்கு பஞ்சமில்லை.



ஏனைய மொழி இலக்கியங்களில் இருப்பதை விட தமிழ் மொழியில் தான் சமய நூல்கள் அதிகமாக இருக்கின்றன. உலக மொழிகளில் உள்ள சமய இலக்கியங்களின் கொள்கைகள், கோட்பாடுகள் தத்துவங்களை விட, தமிழரின் சமய இலக்கியம் போதித்த வாழ்வியல் நெறியை நாடு, இன, மொழி, மத வேறுபாடின்றி அனைவரும் புகழ்ந்திருக் கின்றனர் என்பதையும் பார்க்க முடிகின்றது. மேலை நாட்டு ஜி.யு.போப்பய்யர் திருவாசகத்தைப் படித்துணர்ந்து இது ஓர் எலும்புருக்கும் பாட்டு என்று சொன்னார்.

உள்ளம் உருகப் பாடும் இசைவாணனின் இசையும், கண்களிக்கக் காட்டும் சிற்பியின் ஓவியமும், கண்ணும் காதும் மகிழ நடித்துக் காட்டும் கூத்தும், நல்லிசைப் புலவன் ஒருவனது கவிதையும் நமக்கு எக்காலத்தும், எவ்விடத்தும் நிலை பெற்று இன்பத்தை

விளைவிக்கும் என்பது சத்தியமான உண்மை. எனவே தான் இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர் கவிதையாக கண்மலர்ந்த

**"யாதும் ஊரே யாவரும் கேளிர்"**

**"ஒன்றே குலம் ஒருவனே தேவன்"**

என்பன இன்றைக்கும் மறையாது, நமது உள்ளத்தில் நிழலாடிக் கொண்டிருக்கின்றது. காரணம், கவிதைக் கலைக்கு ஜனனம் உண்டு. மரணம் இல்லை.

**''வள்ளுவர் நூல், அன்பர் திருவாசகம், தொல்காப்பியமே,**

**தெள்ளுபரி மேலழகன் செய்தவுரை – ஒள்ளிய சீர்த்**

**தொண்டர் புராணம், தொகுசித்தி – ஓராறும்**

**தண்டமிழின் மேலாந் தரம்"**

**''தேவர் குறளும், திருநான் மறைமுடிவும்**

**மூவர் தமிழும், முன்மொழியும் – கோவை**

**திருவாசகமும், திருமூலர் சொல்லும்**

**ஒருவாசகம் என் றுணர்"**

என்ற பாடல்களால் நமது பழந்தமிழ் இலக்கியப் புதையல்களின் பெருமையை உணர முடிகிறது. தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட நம்மனோர் மட்டுமல்லாது வேற்று நாட்டு, வேற்று மொழிக்காரர்கள் எல்லாம், இவ்விலக்கியங்களின் இலக்கிய இன்பத்தால் ஈர்க்கப்பட்டு உளம் உருகினர் என்பது வரலாற்றுச் செய்தியாக உள்ளது.

தவத்திரு ஹிராஸ் பாதிரியார், ஜி.யு.போப்பய்யர், வீரமாமுனிவர், கால்டுவெல், டாக்டர் கல் ஜுவெல்பெல் போன்ற பெருமக்கள் எல்லாம் நம் கவிதைக் கலையில் உள்ளத்தை அடகு வைத்துக் கொண்டவர்கள். எனவே தான் ஜி.யு.போப்பயர்

Tamil has a wealth of words which English lacks

என்றார்.

**''கண்ணு தற்பெருங் கடவுளும் கழகமோ டமர்ந்து**

**பண்ணு றத்தெரிந் தாய்ந்தவிப் பசுந்தமிழ் ஏனை**

**மண்ணி டைச்சில விலக்கண வரம்பிலா மொழி – போல்**

**எண்ணி டைப்பக் கிடந்தா எண்ணவும் படுமோ?''**

**– பரஞ்சோதி**

எனவே, காலத்தால், கருத்தால் மூத்த மொழி செந்தமிழ். பைந்தமிழில் உதிர்த்த இலக்கியங்களும் உன்னதமானவை. இத்தகைய கவிதையில் பக்திச் சுவையும், இலக்கியச் சுவையும் நிறைந்தது திருவாசகம். 'திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்' என்பதோர் சொற்றொடரும் உண்டு. திருவாசகத்தைப் படித்துணர்ந்து, உள்ளம் தோய்ந்து, அதன் மீது பித்துப் பிடித்துப் பாடிப் பாடிப் பரவசப்பட்டு, ஆங்கிலத்திலேயும் மொழி பெயர்த்த பெருமகனார் போப்பய்யர். மரணத்தருவாயில் தன் நண்பர்களிடத்திலே, தான் இறந்தவுடன் தன் உடல் மீது நடப்படும் நடு கல்லில், "இங்கே ஒரு தமிழ் மாணவன் புதைக்கப் பட்டிருக்கிறான்," என்று செதுக்கி வைக்கச் சொன்னாராம். இன்றைக்கும் அவரது கல்லறையில் இவ்வாசகம் பொறிக்கப் பட்டுள்ளதைக் காண முடிகிறது. அந்த அளவுக்கு அந்தப் பேரறிஞனை உளம் உருகச் செய்தது மாணிக்கவாசகப் பெருமானது திருவாசகம்.

''பெரும்பாலான எல்லாப் பொதுமக் களையும் மகிழ்வுறுத்தும் நோக்கத்தின் பொருட்டே, எளிய இனிய கவிதையழகுக்காகப் புராணக் கதைகளும், கற்பனைகளும் திருவாசகத்தின் இடையே இணைத்துத் தொடுக்கப் பட்டிருக்கின்றன." – ஜி.யு.போப்.

போப் துரை மகனார் கூறியது போலவே, திருவாசகம் அனைத்து பொதுமக்களுக் கெல்லாமும் இறைவனது அருட்பெருந் திறங்களை விளக்கும் முறையில் திருவாசகத்தின்கண் இடையிடையே போதரும் பல அரும் நிகழ்ச்சிகளும், அற்புதக் கொடைகளும், விளங்கும் முறையில் திருவாசகத்தினை மணிவாசகப் பெருமான் அருளியுள்ளார்– ஏனைய கவிதைகளுக்கும் இல்லாத தனிச்சுவை திருவாசகத்திற்குண்டு.

**திருவாசகச் சிறப்பு**

சமய இலக்கியங்களில் முதல் இடத்தைப் பெறத்தக்க நூல் திருவாசகம். திருவாசகம் ஒரு பக்திப் பாடல். வழிபாட்டிற்கு, இறைவன் திருமுன் பாடி மகிழ மட்டும் தான் என்று பெரும்பாலோர் கருதி வருகின்றனர். ஆனால், இவற்றிற்கும் மேலாக திருவாசகத்தில் இலக்கிய கூறுகள், வாழ்வியல் நெறிகள், மெய்ப்பாட்டு உணர்வுகளை உள்ளடக்கிய தாகவும் உள்ளது என்பதைப் பலர் நினைத்துப் பார்ப்பதில்லை. திருவாசகத்தில் கண்டுள்ள நிகழ்வுகள், செய்திகள் வேண்டுமானால் சைவர்களுக்கு மட்டும் உரித்தானது என்றாலும், திருவாசகத்தின் உட்கருத்து, கொள்கைகள், நெறிகள் வையகத்து மக்கள் அனைவருக்கும் பொதுவானதாகவே உள்ளது என்பதையும் பார்க்க முடிகிறது. திருவாசகத்தினைச் சமயக் கண்கொண்டு பார்க்காது ஓர் இலக்கியத் தன்மையோடு ஒப்பு நோக்கினால் அதன் சிறப்பு புரியவரும். இலக்கியம், மொழி, கவிதை, சமயம், ஞானம், அனுபவம், அருள் ஆகிய பல்வேறு கோணங்களில் மணிவாசகப் பெருமானது படைப்புலகத்தினை ஒப்பு நோக்கிட வேண்டும்.

திருவாசகத்தை பொருளுணர்ந்து, உள்ளம் உருகி, கண்ணீர் மல்க ஓதுபவர் எவராயினும் அவர்கள் வேறெங்கும் காணாத, உணராத பேருவகையைப் பெறுவர் என்பது உறுதி. திருவாசகம் தன்னை ஓதுபவர் உள்ளத்தையும், உணர்வையும் உயிரையும் எல்லாம் உருக்கி புனிதப்படுத்தும் திறனில், உச்சநிலையில் உள்ளது. மக்கட் பிறப்பின் இழித்தகைமை யையும், பல்வகை குறைபாடுகளையும் இறைவன் திருமுன் எடுத்தெடுத்து இயம்பி பரவித் துதித்து, மக்கள் உள்ளத்தை எல்லாம் கரைத்துத் தூய்மை செய்ய வல்லது திருவாசகம்.

வள்ளல் பெருமான் இராமலிங்கர் திருவாசகத்தில் ஊறித் திளைத்தவர். திருவாசகத்தின்கண் வரும் ஒரு சொற்றொடர் அல்லது மொழியே, நமக்கு எல்லா வகையான நலன்களை விளை விக்க வல்லது என்பது திருவருட்பா நாயகரது அனுபவ உண்மையாக இருந்திருக்கிறது. வடலூரார் தனது திருவருட்பாவில் பல இடங்களில், தான் திருவாசகத்துப் பேரின்ப வெள்ளத்தில் திளைத்தனைப் பதிவு செய்துள்ளார்.

**"வருமொழி செய் மாணிக்க**
**வாசக நின் வாசகத்தில்**
**ஒருமொழியே என்னையும் என்**
**உடையானையும் ஒன்றுவித்துத்**
**தருமொழியாம் என்னில், இனிச்**
**சாதகம் ஏன்? சஞ்சலம் ஏன்?**
**குருமொழியை விரும்பி, அயல்**
**கூடுவதேன்? கூறுதியே?"**

**–திருவருட்பா**

என்று வள்ளல் பெருமான் திருவாசகத்தின் ஒப்புயர்வற்ற சிறப்பினை, மிகவும் வியந்து வியந்து புகழ்ந்துரைத்தல் நாம் பெரிதும் உணர்ந்து உய்தற்குரியது.

ஒரு சிறந்த கவிதையானது, அதனைப் பாடும் கவிஞனின் அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டே, முகிழ்ந்து அரும்பி மலர்கின்றது. அப்படி தான் உய்த்துணர்ந்த அவ்வனுப வத்தைத் தன்னைப் பயிலும் பிறரும் அடையு மாறு செய்து மகிழ்விக்கிறது. அதுவே சிறந்த கவிதை. அதை Poetry is the expression of the best and happiest moments of the happies an best minds. என வழிமொழிந்தவன் ஷெல்லி.

தமிழ் நாட்டில் தோன்றிய சமயப் புரட்சியின் நாயகர்களாக திருஞான சம்பந்தரும், திருநாவுக்கரசரும் நின்று தமிழையும், சைவத்தின் வழியாக இந்த மண்ணின் இறையாண்மைக்கு ஒரு புதிய வழியை உருவாக்கினார்கள். இந்த வழியில் வந்தவர் மணிவாசகப் பெருமான்.

''கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர்'' என்னும் பழமொழியைப் பொய்யாக்கி, இறைவனைக் கண்டதுடன் அவனது அருள் மாட்சிமைகளை, நாம் வியந்து இனிது மகிழும் வண்ணம் விந்தை புரிந்திடும் தமிழில் விண்டு மொழிந்தருளிய ஞானவள்ளல் மணிவாசகப் பெருமான்.

**"கண்ணால் யானும் கண்டேன் காண்க**
**அருள்நனி சுரக்கும் அமுதே காண்க**
**கருணையின் பெருமை கண்டேன் காண்க**
**புவனியில் சேவடி தீண்டினன் காண்க**

சிவன் என யானும் தேறினன் காண்க
அவன் எனை ஆட்கொண்டு அருளினன் காண்க
குவளைக் கண்ணி கூறன் காண்க
அவளும் தானும் உடனே காண்க"
–திருவாசகம்.

என வருகின்ற திருவாசகத்தின் செய்தி இவ்வுண்மையை வலியுறுத்திக் கூறுவதைப் பார்க்க முடிகிறது. "இங்ஙனம் இருந்து என்று எவ்வண்ணம் சொல்லுவேன்? அங்ஙனம் இருந்து என்று உந்தீபற, அறியும் அறிவுவது அன்று உந்தீபற'' என்றும் ''அவ்வாறு அறிவார் அறிவன்றது அலால் எவ்வாறு ஒருவர்க்கு இசைவிப்பதுவோ" என்றெல்லாம் நினைத்து, நினைத்து இன்புறுத்தலைக் கொண்ட சொற்கோவையையும் மணிவா சகரது மணிமொழி திருவாசகத்தில் பார்க்க முடிகிறது. பிறருக்கு எடுத்துச் சொல்வதற்கும் எழுதிக் காட்டுவதற்கும் ஒரு சிறிதும் இயலாத இறையின் பேரின்ப அனுபவங்களை எல்லாம் நம்மோர்க்கு இனிது எடுத்துச் சொல்லியும், அழகுற எழுதிக் காட்டியும் விளக்குவது மணிவாசகரது தனிச்சிறப்பு. இதுவே திருவாசகத்தின் தனிப்பெரும் கவிதைச் சிறப்பு.

"எல்லாம் வல்ல சிவபெருமான், எனக்குத் தடக்கையின் நெல்லிக்கனி போல்பவன் ஆயினன். அவன் என்பாற் செய்த பொருளின் திறனை, யான் பிறர்க்கு எடுத்துச் சொல்லும் வகை இன்னதென்று அறிகிலேன். நாயை ஒத்தானவன் யான், அவன் என்பாற் செய்த பேரின்பத்தைத் தாங்குதற்கு இயலாமல் உள்ளேன். அவன் என்னை என்ன செய்தான் என்பதும் எனக்குத் தெரியவில்லை. ஐயோ யான் என்னுணர்வையே இழந்து விட்டேன்.

அவன் எனக்கு அருள்புரிந்த திறன் இது என அறிகின்றிலேன். அவன் வழங்கிய பேரின்பத் தேறலை யான் குடித்தும் நிறைவு பெற்றிலேனே. விழுங்கியும் பொறுத்துக் கொள்ள மாட்டாது உள்ளேன். செழுந்தண் பாற்கடலின் அலைகளைப் போல மிகுந்தாலும், மேன்மேற் பொங்கி வழிவதும் ஆகிய பேரின்பம் அவனால் எனக்குக் கிடைத்தது. நிறைநிலாக் காலத்தில் கடலின் நடுவில் உள்ள நீரைப் போலே, சொல்லின் எல்லையைக் கடந்த அப்பேரின்ப அமிழ்தமானது' என் உள்ளம் முழுவதும் நிறைந்து மேன்மேற் பொங்கித் ததும்பும்படியும் என் மயிர்கால்கள் தோறும் தேங்கிப் பெருகி நிற்கும்படியும் அவன் செய்து விட்டான். நாய் போன்ற சிறுமையை உடைய, என் உடம்பினுள்ளே அப்பெருமான் எழுந்தருளித் தனக்கு ஒரு சிறிய வீட்டை அமைத்துக் கொண்டான். கொடியவனாகிய எனது ஊன் உடம்பெல்லாம் இனிய தேனைப் பாயச் செய்தான்.

யான் இதற்கு முன் அறியப் பெறாத புதுமை மிக்க அற்புதமான அமுத தாரை, எனது எலும்புத் துளைகளி லெல்லாம் ஏறும் படிச் செய்தான். உருளும் இயல்பிற்றாகிய உள்ளத்தினையே உருளும் தன்மையுடைய உடம்பை அமைத்து வைத்தான். ஒன்றுக்கும் பற்றாத என்னையும், மதக்களிப்பு மிக்க ஆண் யானை போல மிக மேலான உயர்ந்த உள்ளும் புறமும் தன்னுடைய கருணையாகிய தேன் கலந்து நிறையும்படி செய்தான். தனது அருளுடன், மிக மேலான அமிழ்தத்தையும், மேன் மேலும் பருகும்படியும், பிரம்மனும், திருமாலும் அறியாத பெற்றிமையை உடைய சிவபெருமான் எனக்கு வழங்கினான்," என்பார் மணிவாசகப் பெருமான்.

இவ்வாறாக தென்னவர்கோன் சிவபெருமான் தம்மாட்டுச் செய்த திருவருட்பேரின்பப் பக்தியை ஞான அனுபவங்களைத் தமது திருவாசகத்தின் திருவண்டப் பகுதியில் தெள்ளத் தெளிந்த முறையில் பதிவு செய்துள்ளார், மணிவாசகர்.

**''உருவண்டப் பெருமறை என்று உலகமெலாம் புகழ்கின்ற**
**திருவண்டப் பகுதி எனும் திருவகவல் வாய்மலர்ந்த**
**குரு என்றுஎப் பெருந்தவரும் கூறுகின்ற கோவே–நீ**
**இருஎன்று, அத்தனியகவல் எண்ணம் எனக்கு இயம்புதிலே"**
**–திருவருட்பா.**

என்பார் வள்ளல் பெருமான்.

ஆம் திருவாசகம் ஒரு தேனடை.

இந்தியாவிலேயே கயிலாய யாத்திரையை மட்டுமே 12 ஆண்டுகளாக, யாரும் தர இயலாத குறைவான கட்டணத்தில் 15 நாட்களிலும் அதிக சலுகையுடன் நவீன வசதியோடு அனைவரையும் கிரிவலம் அழைத்துச் செல்லும் அனுபவம் மிக்க நிறுவனம்

# கைலாஷ்-மானஸரோவர்-முக்திநாத்

## ஆகஸ்ட் 13, செப்டம்பர் 12, 2010

புனிதத்துவம் வாய்ந்த கயிலாயம் மற்றும் மானஸரோவரின் எழுச்சி மிக்க சக்தியை நீங்கள் உணரக்கூடிய அரிய வாய்ப்புடன் ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி அன்று மானஸரோவரில் புனித நீராடி, பிரதோஷத்தில் கிரிவலம் வர உலகத்தரம் வாய்ந்த நேபாளில் உள்ள **SHRESTHA HOLIDAYS** உடன் இணைந்து ஒவ்வொரு குழுவிலும் சத்சங்கங்கள் மற்றும் பஜன், தியானத்துடன் புறப்படுகிறோம்.

**ரயில் மூலம் 22 நாட்கள், விமானம் மூலம் 15 நாட்கள், ஹெலிகாப்டர் மூலம் 10 நாட்கள்**

காட்மண்டில் இருந்து (சூப்பர் டீலக்ஸ் வசதியுடன்) டயோட்டா கார் (4500 மாடல் புது வண்டி) மூலம் கயிலாயம் சென்று தரிசித்து பின் காட்மண்டு வருவதற்கு 15 நாட்கள் ஆகும். அனைத்து கட்டணம் உட்பட **ரூ.61,900/-** மட்டுமே (வேறு எந்த கட்டணமும் கிடையாது)

சென்னையிலிருந்து இரயில் மூலம் காட்மண்டு சென்று, அங்கிருந்து டயோட்டா கார் (4500 மாடல் புது வண்டி) மூலம் கயிலாயம் சென்று தரிசித்து, பின் இரயில் மூலம் சென்னை வருவதற்கு 22 நாட்கள் ஆகும். இரயில் கட்டணம் உட்பட (சூப்பர் டீலக்ஸ் வசதியுடன்) **ரூ.64,900/-** மட்டுமே (வேறு எந்த கட்டணமும் கிடையாது)

சென்னையிலிருந்து டெல்லி வழியாக விமானத்தில் காட்மண்டு சென்று, அங்கிருந்து டயோட்டா கார் மூலம் கயிலாயம் சென்று தரிசித்து, பின் விமானம் மூலம் சென்னை வருவதற்கு 15 நாட்கள் ஆகும். அனைத்து கட்டணம் உட்பட **ரூ.61,900/-** + விமான கட்டணம்

காட்மண்டில் இருந்து (சூப்பர் டீலக்ஸ் வசதியுடன்) ஹெலிகாப்டர் மூலம் கயிலாயம் சென்று தரிசித்து பின் காட்மாண்டு வருவதற்கு 10 நாட்கள் ஆகும். அனைத்து கட்டணம் உட்பட **ரூ.1,40,000 /-** மட்டுமே. (வேறு எந்த கட்டணமும் கிடையாது)

சென்னையிலிருந்து டெல்லி வழியாக விமானத்தில் காட்மண்டு சென்று, அங்கிருந்து மனக்கமனா, போக்ரா, ஜோம்சோம் வழியாக முக்திநாத் சென்று உபன்யாசத்துடன் தரிசனம் செய்து, மீண்டும் காட்மாண்டு அடைந்து சென்னை வர 5 நாட்கள் ஆகும். அனைத்து கட்டணம் உட்பட ரூ.12,900/- + விமான கட்டணம்

சிவாச்சாரியார்கள், திருமுறை ஓதுபவர்கள், டாக்டர்கள் மற்றும் குரூப்பாக வருபவர்களுக்கு கட்டணத்தில் சலுகை. பாஸ்போர்ட் அவசியம். இல்லாதவர்களுக்கு ஏற்பாடு செய்து தரப்படும்.

♦ காட்மண்டுவில் ஸ்டார் ஹோட்டலில் தங்கும் வசதி ♦ மானஸரோவர், கயிலாயம், முக்திநாத்தில் சாஸ்திரிகளைக் கொண்டு அவரவர்களுக்கு சிறப்பு பூஜை செய்யப்படும் ♦ ஒவ்வொரு ஜீப்பிலும் ஆக்சிஜன், மாஸ்க் வசதியுடன் 4 அன்பர்கள் மட்டுமே ♦ கயிலை பயணம் வீடியோ எடுக்கப்படும் ♦ யாத்திரை காலம் முழுவதும் மினரல் குடிநீருடன் ஆசாரமான பிராமணாள் உணவு ♦ மருத்துவ வசதி ♦ குளிருக்கு ஏற்ற பாதுகாப்பான தங்குமிடங்கள் (Mud Houses) ♦ சென்னையிலிருந்து கயிலாயம் சென்று கயிலைநாதனை தரிசித்து ஊர் திரும்பி வரும் வரை நாங்கள் கூடவே இருந்து சிறப்பான சேவை செய்கிறோம்.

கயிலாய, முக்திநாத் பயணத்திற்கு தேவையான அனைத்து உபகரணங்களுடனும் பாதுகாப்புடனும் தரமான, சுகாதாரமான தமிழக உணவு வகைகளை 3 வேளையும் வழங்கி ஒவ்வொரு குழுவிலும் டாக்டர் மற்றும் சிவாச்சாரியார் துணையுடன் அனைத்து வயதினரையும் (age no limit) அழைத்துச் செல்லும் அனுபவம் மிக்க ஒரே நிறுவனம்.



## ஸ்ரீ அன்னபூரணி யாத்ரா சர்வீஸ்

**Kailash - Manasarovar & Mukthinath Yatra Entirely Organised by Brahmins**

63, நடுத்தெரு, மயிலாப்பூர், சென்னை - 600 004

**Cell : 97911 11979 / 94446 76757** (24 Hrs)



**SPECIAL CARE FOR SENIOR CITIZENS ENJOY POURNAMI (FULLMOON NIGHT) AT MANASAROVER**



திருக்கோயில் பணியாளர்களுக்கு ஊதிய விகிதம் நிர்ணயம் செய்வதற்காக 6வது ஊதியக் குழு அமைத்து ஆணை வெளியிட்டும், ஊதியக் குழுவின் பரிந்துரைகளை ஏற்று திருக்கோயில் பணியாளர்களுக்கு திருத்திய ஊதிய நிர்ணயம் வழங்க ஆணை பிறப்பித்தமைக்காக மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு.கேஆர். பெரியகருப்பன் அவர்களைத் தமிழ்நாடு திருக்கோயில் பணியாளர் சங்கத்தினர் 02.07.2010 அன்று சந்தித்து நன்றி தெரிவித்தனர். சங்க நிர்வாகிகள் திருவாளர்கள் ஜி.இராமகிருஷ்ணன், சி.மாதவ பிரசாத், வி.பி.சீனிவாசன், எம்.வினாயகம், முத்துசாமி மற்றும் திருக்கோயில் பணியாளர்கள் உடனிருந்தனர்.

# உடையவரின் மூன்று திருமேனிகள்



**1.தமர் உகந்த திருமேனி:** திருநாராயண புரத்திலிருந்து இராமாநுஜர் விடை பெற்றபோது பாகவத் உத்தமர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி அவர்கள் செய்து வைத்திருந்த தம்மைப் போன்ற ஒரு விக்ரகத்தை உகந்து தழுவினார். அதுவே "தமர் உகந்த திருமேனி".

**2. தான் உகந்த திருமேனி:** ஸ்ரீபெரும்புதூரில் முதலியாண்டானின் குமாரர் கந்தாடை ஆண்டான் உடையவரின் அர்ச்சாரூப விக்ரகத்தைச் செய்து முறைப்படி கண்களைத் திறக்கும்போது உளி கண்ணில் பட்டு இரத்தம் கசிந்தது. அங்கே திருவரங்கத்தில் உடையவரின் கண்களில் ரத்தம் கசிந்தது. அடியவரின் கேள்விக்கு விளக்கம் கூறிய உடையவர் ஸ்ரீபெரும்புதூரில் ஸ்தாபிக்கப்பட்ட தம் விக்ரகத்தைத் தாம் தழுவித் தந்ததால் ''தான் உகந்த திருமேனி'' என்று வழங்கலாயிற்று.

**3. தானான திருமேனி:** திருவரங்கத்தில் அரங்கன் விரும்பியவாறு கோயிலில் இவரது திவ்ய மங்கள திருமேனியை அப்படியே பிரதிஷ்டை செய்தார்கள். அதற்குத் "தானான திருமேனி" என்று பெயர் வழங்குகிறது.

# ஐயங்கார்குளம் ஆஞ்சநேயர்

இராமபிரானுக்கு அருந்தொண்டு செய்து தலைசிறந்த பக்தராகத் திகழும் சிறிய திருவடியான ஆஞ்சநேயருக்குத் தனி திருக்கோயில் ஐயங்கார்குளம் எனுமிடத்தில் உள்ளது. இதனைச் சஞ்சீவிராயர் ஆலயமென அழைக்கின்றனர்.

இராமபிரானுக்கும் இராவணனுக்கும் இலங்கையில் நிகழ்ந்த போரில் இராவணனின் புதல்வனான இந்திரஜித் ஏவிய நாகபாசத்தால் இலட்சுமணன் மூர்ச்சையடைந்தார். எவ்வளவு முயற்சி செய்தும் அவரது மயக்கத்தைத் தெளிவிக்க முடியவில்லை. முடிவில் ஜாம்பவானின் உதவியை நாடினர். அவர் தெய்விகத்தன்மை கொண்ட சஞ்சீவி என்ற மூலிகையைக் கொண்டுவந்தால் மட்டுமே மயக்கத்தை நீக்க முடியுமென்றார். சஞ்சீவி மூலிகையை எடுத்துவரச்சென்ற ஆஞ்சநேயர் இமயமலைக்குச் சென்றார். அம்மலையில் பல இடங்களில் அதைத் தேடினார். அதைக் கண்டறிய முடியவில்லை. அதனால் அம்மலையையே பெயர்த்து எடுத்துக்கொண்டு இலங்கையை நோக்கிப் பயணமானார். அவ்வாறு கொண்டு வரும் வழியில் ஐயங்கார் குளம் என்ற ஒரு தலத்தில் சிறிது நேரம் தங்கியிருந்து சஞ்சீவி மலையை எடுத்துச் சென்றார். அப்பொழுது அந்த மலையிலிருந்து ஒரு சிறுபகுதி இத்தலத்தில் விழுந்தது. அதன் பலனாய் இப்பகுதியில் மருத்துவ குணங்கள் காற்றில் கலந்தது. அதனுடன் ஆஞ்சநேயரின் அருள்தன்மையும் நிலைத்து விட்டது. இதற்குச் சான்றாக இவ்வூரில் இதுநாள் வரை எவரும் பாம்பு தீண்டி இறந்ததில்லை.

சஞ்சீவிமலையைத் தூக்கிவந்த சஞ்சீவிராயரான அனுமார் இளைப்பாறிய இடத்தில் எழுப்பப்பட்ட ஆலயம் சஞ்சீவிராயர் ஆலயம் என அழைக்கப்படுகின்றது.




**ஐயங்குளம்**


இக்கோயிலின் பின்புறம் 126 ஏக்கர் பரப்பளவில் மிகப்பெரிய திருக்குளம் அமைந்துள்ளது. இது பெரிய ஏரியாகவே உள்ளது. சஞ்சீவிராயர் ஆலயத்தின் பின்புறம் குளத்தில் இறங்க அழகிய படிக்கட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன. இக்குளத்து நீருக்கு சஞ்சீவி மலையின் மருத்துவ குணங்கள் உண்டு என்பதால், இதில் குளித்து எழுபவரின் நோய் நீங்கும் என்பது நம்பிக்கையாகும்.

**தாத தேசிகன்**

இத்திருக்குளம் தோன்றியதற்கு ஒரு சுவையான வரலாறு உண்டு.







தாதாச்சாரியார் என்ற வேதவிற்பன்னர் ஒருவர் ஏராளமான பொன்னையும் பொருளையும் எடுத்துக்கொண்டு தனது சீடர்களுடன் இவ்வூர் வழியே பயணம் மேற்கொண்டார். இவ்விடம் வந்ததும், அங்கே மறைந்திருந்த வழிப்பறி கொள்ளையர்கள் அவரைச் சூழ்ந்து கொண்டனர். அப்பொழுது அவர் எல்லாம் வல்ல இராமபிரானை மனமுருகி வேண்டி நின்றார். உடனே, அவ்விடத்திற்குப் பெரிய குரங்குக் கூட்டம் வந்தது. அவை அங்கிருந்த கொள்ளையர்களின் மேலே பாய்ந்து கடித்துக் குதறின. உயிர் தப்பினால் போதும் என்ற நிலையில் கொள்ளையர்கள் அனைவரும் அங்கிருந்து தப்பியோடி விட்டனர்.

அதன்பின் அவருக்கு அவ்வூரிலிருந்த ஆஞ்சநேயரின் மீது அளவற்ற பக்தி ஏற்பட்டது. ஆபத்து காலத்தில் வானரங்களை அனுப்பித் தம்மைக் காப்பாற்றியதற்காக ஆஞ்சநேயரைப் போற்றி வணங்கினார். அவர் வீற்றிருக்கும் ஆலயத்திற்கு ஏதேனுமொரு திருப்பணி செய்ய வேண்டுமென்ற எண்ணம் ஏற்பட்டது. அந்த எண்ணத்தில் விளைவாக, ஆலயத்தை ஒட்டி பிரம்மாண்ட திருக்குளத்தை உருவாக்கினார். இதுவே தாத சமுத்திரம் என்றும், ஐயங்கார் குளம் என்றும் அழைக்கப்படுகிறது. அத்துடன் திருக்கோயிலுக்குத் திருப்பணி செய்து ஸ்ரீ அனுமத் விம்சதி என்ற தோத்திரப் பாடல்களை இயற்றினார். இதனைப் பாடுவோர் பதினாறு பேறுகளையும் பெற்று வாழ்வார்கள் என இப்பாடலில் கூறப்பட்டுள்ளது. ஐயங்கார் குளம் ஆஞ்சநேயரை வழிபடுவது இராமபிரான் பாதங்களில் சரணடைவதைப் போன்றது என்று அவர் அதில் குறித்துள்ளார்.

### தொன்மைச் சிறப்பு

இத்தலம் விஜயநகர மன்னர்களின் கட்டடக் கலைக்குச் சான்றாகத் திகழ்கின்றது. ஒரே கல்லில் வடித்த பெரிய நான்கு நெடுந்தூண்களால் தாங்கப்படும் விசாலமான மண்டபம் இதற்குச் சான்று கூறுகின்றது. பரந்த ஏரிக்குச் சுற்றிலும் உள்ள படிகள் மற்றும் திருக்கோயில் விஜயநகர மன்னர்களால் கட்டப்பட்டவை ஆகும். இவ்வூர் படைவீட்டு ராஜ்ஜிய காளியூர் கோட்டத்து ஐயங்குளம் என்று கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.


### ஆலய அமைப்பு

ஒரே கல்லில் உருவாக்கப்பட்டுள்ள அழகிய நான்கு கல் தூண்களைக் கொண்ட உயர்ந்த மண்டபம் ஆலயத்திற்கு முன்பாக அமைந்துள்ளது. அதையடுத்து, மூன்று நிலை இராஜ கோபுரம் அமைந்துள்ளது. ஆலயத்தின் வலதுபுறமும் இடதுபுறமும் சிறு மண்டபங்கள் அமைந்துள்ளன. தெற்கு நோக்கிய வாயில் வழியே ஆலயத்திற்குள் நுழைந்ததும், வடக்கு நோக்கிய நுழைவாயிலில் உட்பிரகாரத்தை அடுத்து மகா மண்டபம், அர்த்தமண்டபத்தை அடுத்து கருவறையில் மூலவரான சஞ்சீவராயர் வடக்கு நோக்கி இரு கரங்களையும் கூப்பி வணங்கிய கோலத்தில் எழிலுடன் காட்சி தருகின்றார். சஞ்சீவராயர் அயோத்தியை நோக்கி வணங்குவதாக இக்கோலம் அமைந்துள்ளது. இவருக்கு எதிரே இராமன் சீதை லட்சுமணர் திருக்கோலங்கள் காட்சி தருகின்றன.

ஆலய முன் மண்டபத்தின் முனைகளில் பெரிய பெரிய கல் வளையங்கள் (கற்கங்குலி)

காணப்படுகின்றன. அவற்றில் ஒன்றிரண்டு மட்டுமே இப்போது நல்ல நிலையில் உள்ளன. அதனருகே வெளிப்பிரகாரத்தில் மிகப் பெரிய கல் மேடை காணப்படுகிறது. இது அக்காலத்தின் அன்ன தானத்திற்குப் பயன் பட்டதாகக் கூறப்படுகிறது. இதையடுத்து கருடாழ்வார் வடக்கு நோக்கி வணங்கிய நிலையில், வானமே கூரையாகக் கொண்டு காட்சி தருகின்றனர்.

இவ்வாலயத்தில் இருபத் தைந்து கால் அர்த்த மண்டபத்தில் இராமாயணச் சிற்பங்கள் வெகு நேர்த்தியாகச் செதுக்கப்பட்டுள்ளன. மண்டபத் தூண்களுக்கு அழகு சேர்க்க குதிரை வீரன் சிலைகள் வடிவமைக்கப் பட்டுள்ளன.



**நடபாவிக் கிணறு**

இவ்வாலயத்தை ஒட்டி அமைந்துள்ள பிரம்மாண்ட திருக்குளத்தின் வடக்கே நடபாவிக் கிணறு என்ற சிறப்பு வாய்ந்த கிணறு அமைந்துள்ளது. இந்தக் கிணற்றுக்குச் செல்ல படிக்கட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன. கீழே சென்றதும், அழகிய சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்த பதினாறு கால் மண்டபம் கருங்கல்லினால் அமைக்கப்பட்டுள்ளது. இது ஒரு அரிய கட்டட அமைப்பாகும். பூமிக்கு அடியில் அமைக்கப்பட்டுள்ள மண்டபமாகவும் இதன் நடுவே தீர்த்தக் கிணறும் உள்ளன. மேலிருந்து பார்த்தால் எதுவும் தெரியாது. இதை அறிந்து செல்ல படிக்கட்டின் தொடக்கத்தில் தோரணவாசல் அமைக்கப்பட்டுள்ளது.

எப்பொழுதும் நீர் நிறைந்து காணப்படும் இந்தக் கிணற்றில் சித்ரா பவுர்ணமி அன்று உள்ளிருக்கும் நீர் வெளியேற்றப்பட்டு, அதில் காஞ்சி வரதராஜப் பெருமாள் எழுந்தருள்வார். அதன் மறுநாள் ஆலயத்தின் சார்பில் இராமர், இலட்சுமணர், சீதை ஆகியோர் எழுந்தருள்வர். அதன்பின், கிணற்று நீர் ஊற்றுப் பெருக்கெடுத்து மண்டபத்தையும், கிணற்றையும் நிரப்பிவிடும்.

இரண்டு நாள்கள் மட்டுமே கண்டு மகிழக்கூடிய இந்த அபூர்வ காட்சி காண விரும்புவோர், சித்ரா பவுர்ணமி அன்றும், மறுநாளும் ஐயங்கார்குளம் வந்து தரிசிக்கலாம். இந்த அமைப்பு அக்கால கட்டடக் கலை நிபுணத்துவத்திற்குச் சான்றாக அமைந்துள்ளது.

**விழாக்கள்**

இத்தலத்தில் மாதந்தோறும் மூல நட்சத்திரத்தன்று திருமஞ்சனம், புஷ்பாஞ்சலி, புஷ்பாங்கி, வெண்ணெய்க் காப்பு மற்றும் சுவாமி புறப்பாடு என நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இதேபோல அனுமன் ஜெயந்தியும், இங்கே வெகு சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. சித்ரா பௌர்ணமி அன்றும் மறுநாளும் குளத்தின் பின்புறமுள்ள நடபாவிக் கிணற்றில் காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாளும், இராம இலட்சுமணர் சீதையும் எழுந்தருளும் விழாவும் குறிப்பிடத் தக்கவையாகும்.

**அமைவிடம்:**

திருவண்ணாமலை மாவட்டத்தில் காஞ்சிபுரம் – கலவை நெடுஞ்சாலையில் காஞ்சிபுரத்திலிருந்து வடமேற்கு சுமார் 7 கி.மீ., தொலைவில் ஐயங்கார் குளம் அமைந்துள்ளது. போக்குவரத்து வசதிகள் அதிக அளவில் உள்ளன.

**கட்டுரை– படங்கள்: பனையபுரம் அதியமான்.**





சென்னை திருவொற்றியூர் அருள்மிகு தட்சிணாமூர்த்தி திருக்கோயிலின் திருக்குடமுழுக்குப்பெருவிழா, கடந்த 02.07.2010 அன்று காலை வெகு சிறப்பாக நடைபெற்றது. விழாவில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு. கேஆர்.பெரியகருப்பன், மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு.கே.பி.பி.சாமி, இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் திரு. ப.ரா.சம்பத் இ.ஆ.ப., சென்னை இணை ஆணையர் திரு.பி. வாசுநாதன். உதவி ஆணையர்/ செயல் அலுவலர் திருமதி. த.காவேரி ஆகியோர் கலந்து கொண்டனர்.





சென்னை தம்பு செட்டித் தெருவில் உள்ள அருள்மிகு காளிகாம்பாள் கமடேசுவரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான கதவிலக்க எண்:19 அரண்மனைக்காரன் தெருவில் ரூ.12.5 லட்சம் மதிப்பீட்டில் புதியதாகக் கட்டப்பெற்ற ஸ்ரீ விசுவ பிரம்மா காயத்திரி திருமண மண்டபத்தை 02.07.2010 அன்று மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.கேஆர். பெரியகருப்பன் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

விழாவில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் திரு. ப.ரா.சம்பத் இ.ஆ.ப., சட்டமன்ற உறுப்பினர் திரு. வி.எஸ். பாபு, சென்னை மண்டல அறநிலையத்துறை இணை ஆணையர் திரு. பி. வாசுநாதன், திருப்பணிக்குழுத் தலைவர் திரு.ஆர். ஏழுமலை ஆச்சாரி, அறங்காவலர் குழுத்தலைவர் திரு. எம். பாஸ்கர ஆச்சாரி உள்ளிட்ட அறங்காவலர்கள் கலந்து கொண்டனர்.



இந்து சமய அற நிலையத் துறையில் 57 செயல் அலுவலர் (3ஆம் நிலை, 4 ஆம் நிலை)களுக்கு பணி நியமன ஆணைகளை 05.07.2010 அன்று தலைமைச் செயலகத்தில் நடந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. கே.ஆர்.பெரியகருப்பன், தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் (ம) செய்தித் துறை முதன்மைச் செயலாளர் திரு.க.முத்துசாமி இ.ஆ.ப., இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் திரு. ப.ரா.சம்பத்து இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.




சென்னை மயிலாப்பூர் அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயிலின் தூய்மையான பராமரிப்பு, திறமையான மேலாண்மை, நிர்வாக திறனுக்காக வழங்கப்பட்டுள்ள பன்னாட்டு தரச் சான்றிதழுழை (ஐ.எஸ்.ஓ:9001–2009), 05.07.2010 அன்று தலைமைச் செயலகத்தில் நடந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு.கே.ஆர். பெரியகருப்பன் அவர்களிடம் வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் (ம) செய்தித் துறை முதன்மைச் செயலாளர் திரு.க.முத்துசாமி இ.ஆ.ப., இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் திரு. ப.ரா.சம்பத்து இ.ஆ.ப., மயிலாப்பூர் அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில் துணை ஆணையர் / செயல் அலுவலர் திரு. ரா.செல்வராஜ் மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.






# திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயிலில் கட்டடங்கள் திறப்பு விழா (ம) மூன்றாம் பிரகார மண்டப திருப்பணி துவக்க விழா (12.07.2010.)

சென்னை திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயிலில், ரூ. 52 இலட்சம் செலவில் கட்டப்பட்ட பக்தர்கள் தங்கும் விடுதி, ரூ. 45 இலட்சம் செலவில் கட்டப்பட்ட முக்கிய பிரமுகர்கள் தங்கும் விடுதி, திருக்கோயில் நிதி மூலம் சீரமைக்கப்பட்ட அறங்காவலர் குழு அறை, உபயதாரர்கள் மூலம் சீரமைக்கப்பட்ட இணை ஆணையர்/செயல் அலுவலர் கண்காணிப்பு அறை, உள்துறை கண்காணிப்பாளர்கள் அறை, தவத்திரு சுவாமி இராமதாசர் தியான மண்டபம், சமய நூலக அறை மற்றும் இணை கோயிலான திருவேற்காடு, அருள்மிகு பாலாம்பிகை உடனுறை வேதபுரீஸ்வரர் திருக்கோயிலில் உபயதாரர் செலவில் கட்டப்பட்ட துத்தநாக தகடுகள் போர்த்திய முன் மண்டபம், சிமெண்ட் நடைபாதை முதலானவற்றின் திறப்பு விழாவும் மற்றும் ரூ. 2.25கோடி செலவில் இத்திருக்கோயிலின் மூன்றாம் வடக்கு பிரகார மண்டபத்திருப்பணி துவக்க விழாவும் 12.07.2010 திங்கட் கிழமை அன்று காலையில் சிறப்பாக நடைபெற்றது.

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள் வடக்கு பிரகார மண்டபத் திருப்பணியினைத் துவக்கி வைத்தார்கள்.

திருமதி. இராஜாத்தி கருணாநிதி அவர்கள் திருக்கோயில் வளாகத்தில் சீரமைக்கப் பட்டுள்ள கட்டடங்களைத் திறந்து வைத்தார்கள்.

இவ்விழாவில் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு இ.ஏ.பி சிவாஜி, திரு. ப.ரங்கநாதன், அறநிலையத் துறை ஆணையர் திரு. ப.ரா.சம்பத், இ.ஆ.ப., திருவள்ளூர் வருவாய் கோட்ட அலுவலர் திரு .சோமசுந்தரம் அறங்காவலர் குழுத்தலைவர் திரு. பா.ஜெயராமன், அறங்காவலர்கள் திரு. ஏ.கிருஷ்ணமூர்த்தி, திருமதி கமலா அன்பரசு, திரு. த.இரமேஷ் மற்றும் திருவேற்காடு நகராட்சி தலைவர் திரு. க.பிரபு கஜேந்திரன், நகர மன்ற உறுப்பினர்கள், உபயதாரர்கள் திரு. பா.கோவிந்தசாமி, திரு. எஸ்.குப்புசாமி, விருகை ஜி.ஜெயராமன் ஆகியோரும் சேவார்த்திகளும், பொதுமக்களும் திரளாகக் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

திருக்கோயில் இணை ஆணையர்/செயல் அலுவலர் முனைவர் ந.தனபால் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்திட, திருவள்ளூர் மாவட்ட உதவி ஆணையர் திரு. கா.பெ.அசோக்குமார் அவர்களின் நன்றியுரையுடன் விழா இனிதே நடந்தேறியது.

# திருக்கோயில்களுக்கு பன்னாட்டு தரச்சான்று (ISO) ஒரு விளக்கம்...


CERTIFICATE TÜV NORD

Management system as per
DIN EN ISO 9001 : 2008

In accordance with TÜV NORD CERT procedures, it is hereby certified that

OFFICE OF THE ARULMIGU VADAPALANI ANDAVAR TEMPLE
Chennai – 600 026, Tamilnadu,
India

applies a management system in line with the above standard for the following scope

Management and Administration of Temple Activities

Certificate Registration No. 44 100 104179-E3
Audit Report No. 2.5-4015/2010

Valid until 23.05.2013

Certification Body
at TÜV NORD CERT GmbH

Mumbai, 24.05.2010

This certification was conducted in accordance with the TÜV NORD CERT auditing and certification procedures and is subject to regular surveillance audits.
TÜV NORD CERT GmbH Langemarckstrasse 20 45141 Essen

IAF

***13.07.2010தேதிய தினமலர் நாளிதழில், 'இது உங்கள் இடம்' எனும் பகுதியில் திருக்கோயில்களுக்கு எதற்கு தரச்சான்று பெறப்படவேண்டும் என்ற வினா எழுப்பிய வாசகர் கடிதம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.***

***இச்செய்தி குறித்து இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் ஆணையர் திரு. ப.ரா.சம்பத் இ.ஆ.ப. அவர்கள் மறுப்புத் தெரிவித்து மேற்படி நாளிதழுக்கு அளித்த கடிதத்தின் விவரம் வருமாறு:***



திருக்கோயில்களின் தூய்மைப் பராமரிப்பு, நிர்வாகப் பணிகள் மேம்பாடு, வருகை தரும் பக்தர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செயல்படுத்துதல், திருக்கோயில்கள் சார்பில், பக்தர்கள் மற்றும் பொதுமக்களுக்கு செய்யப்படும் நலத்திட்டங்களை செயல்படுத்துதல், திருக்கோயில்களால் நடத்தப்பட்டுவரும் நூலகங்கள், கருணை இல்லங்கள், கோ சாலைகள் போன்றவற்றை நல்ல முறையில் பராமரித்தல் போன்ற பணிகளுக்காக, திருக்கோயில் நிர்வாகத்தால் ஐ.எஸ்.ஓ., தரச்சான்றுகள் பெறப்படுகின்றன.

இதுவன்றி நாளிதழ் செய்தி குறிப்பிட்டுள்ளது போல் திருக்கோயில்களால் வணிக நோக்கத்துடன் இச்சான்று பெறப்படுவதில்லை; திருக்கோயில்கள் வணிக நோக்கத்தில் செயல்பட வேண்டும் என்ற அவசியமும் இல்லை.

திருக்கோயில்கள் ஆகம விதிகள் மற்றும் பழக்க வழக்கங்களை அடிப்படையாகக் கொண்டு, இத்தரச்சான்றுகள் வழங்கப் படுவதில்லை. திருக்கோயில்கள் இவ்வாறு தரச்சான்றுகள் பெறுவதால், பக்தர்கள் மற்றும் பொதுமக்களின் மனம் புண்படும் நிலை ஏற்படுவதில்லை.

மேலும் இதனால் திருக்கோயில்களில் அன்றாடம் நடைபெறும் நித்ய படி பூஜைகள், திருவிழாக்கள் மற்றும் இதர வைபவங்களுக்கு, எவ்விதமான பாதிப்பும் ஏற்படுவதில்லை. மேலும் 'தரம்' என சான்றளிக்கப்படுவதின் நோக்கமே, சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் / நிறுவனங்களில் பணியாற்றி வரும் பணியாளர்களின் தன்னலமற்ற சேவைப்பாடுகளுக்கான மேம்பாட்டை ஊக்கப்படுத்துதலே முக்கியமானதாகும்.

எனவே, வெளிநாட்டினரும் பிரமிக்கத்தக்க வகையிலும், பாராட்டத்தக்க வகையிலும் ஒரு சான்று, கயிலையே மயிலையாக அமைந்த, மயிலை கபாலீசுவரர் திருக்கோயிலுக்கும், தொலைதூரத்தில் அமைந்துள்ள தென்பழனி ஆண்டவரைத் தரிசிக்க முடியாத வட பகுதி மக்களுக்கு அருளாசி வழங்கிவரும் அருள்மிகு வடபழனி ஆண்டவர் திருக்கோயிலுக்கும், தூய்மை, சேவை, பராமரிப்பு, பாராட்டத்தக்க, மகிழ்ந்து நோக்கத்தக்க, செயல்பாடு களுக்காக, சர்வதேச தர நிறுவனம், பாராட்டி சான்றிதழ் வழங்கி உள்ளது. இதை எண்ணி, எல்லாரும் மகிழ வேண்டும்.

***–ப.ரா.சம்பத்,***
***ஆணையர்.***

# கடவுள் ஐ.எஸ்.ஓ.

**மே**லாளர் முதல் கடைநிலை ஊழியர் வரை அத்தனை பேரும் சீருடையில் ஜொலிக்கிறார்கள். மேஜை முதல் கடிகாரம் வரை அனைத்துப் பொருட்களிலும் அடையாள எண்ணிட்ட ஸ்டிக்கர்கள். வாயிலில், மாற்றுத் திறனாளிகளுக்கான மூன்று சக்கர வண்டிகள், பூஜைக்கான கட்டணங்கள், நேரங்கள் மின்னணுத் திரையில் பளீரிடுகின்றன. விபூதிச் சிதறல்கள் கூட இல்லாமல் பளிச்சிடுகிறது தரை. திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயிலிலும், வடபழனி முருகன் கோயிலிலும், மயிலாப்பூர் கபாலீசுவரர் கோயிலிலும் நிகழ்ந்துள்ள இதுபோன்ற மாற்றங்களால் பக்தர்கள் பூரித்துப் போயிருக்கிறார்கள்.

எப்படி நடந்தது இந்த திடீர் மாற்றம்...?

எல்லாம் ஐ.எஸ்.ஓ., தரச் சான்று செய்த மாயம்!

பார்த்தசாரதி, முருகன், கபாலி – மூவருக்கும் ஐ.எஸ்.ஓ. **9001–2008** சர்வதேச தரச் சான்றிதழை வழங்கியிருக்கிறது, சர்வதேச தர நிர்ணய அமைப்பு.

இதென்ன கலாட்டா?

சுவிட்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த சர்வதேச தர நிர்ணய அமைப்பு, **163** நாடுகளில் கிளை பரப்பி இயங்கி வருகிறது. தகுந்த விதிமுறைகளைக் கடைபிடித்து, போதுமான ஊழியர்களோடு, தரமாக இயங்கும் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களை இனம் கண்டு, தீவிர ஆய்வுகள் செய்து, மதிப்புமிக்க



தரச் சான்றுகளை வழங்கி வருகிறது. இதற்கென ஒவ்வொரு நாட்டிலும் பிரதிநிதியை நியமித்திருக்கிறது.

இந்தியாவில், நம் கோயம்பேடு பேருந்து நிலையம் உட்பட ஏராளமான அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் இச்சான்றைப் பெற்றுள்ளன. அந்த வரிசையில், இப்போது தமிழகத்தின் பாரம்பரியமிக்க கோயில்களும் இடம் பெறத் தொடங்கியுள்ளன. கோவை காந்திபுரத்தில் உள்ள சித்தி விநாயகர் கோயிலைத் தொடர்ந்து இப்போது சென்னை மண்டலத்தைச் சேர்ந்த இந்த 3 கோயில்களுக்கு தரச் சான்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

எந்த அடிப்படையில் இந்தச் தரச்சான்று வழங்கப்படுகிறது? இந்து சமய அறநிலையத் துறை சென்னை மண்டல இணை ஆணையர் பி.வாசுநாதனிடம் கேட்டோம்.



பி. வாசுநாதன்

“ஒரு கோயிலை எவ்வாறு நிர்வாகம் செய்ய வேண்டும் என்ற விதிகள் நம்மிடம் இருக்கின்றன. அந்த விதிகளின் அடிப்படையில், ஐ.எஸ்.ஓ., அமைப்பின் இந்திய பிரதிநிதியான Tuev நிறுவன அதிகாரிகள் கண்காணித்தார்கள். நிர்வாகம், பதிவேடுகள், பராமரிப்பு, மக்களுக்கான சேவை, சுற்றுப்புறத் தூய்மை ஆகியவற்றை பல கட்டங்களாக ஆய்வு செய்தார்கள். குறிப்பிட்ட காலத்தில், அவர்கள் நிர்ணயித்த தரத்துக்கு அனைத்துப் பணிகளும் மேம்படுத்தப்பட்டன. அதன் பிறகே தரச்சான்றுகள் வழங்கப்பட்டன,” என்கிறார் வாசுநாதன்.

இந்தத் தரச்சான்று காரணமாக கோயிலே பளீரென மாறிப் போய் இருப்பதால் பக்தர்கள் மத்தியில் மகிழ்ச்சி நிலவுகிறது. என்றாலும், ‘கார்பரேட் அலுவலகங்களைப் போல கோயில்களுக்குத் தரச் சான்று பெறுவது ஆகமவிதிகளில் தேவையில்லாத தலையீடுகளை உருவாக்கும். கோயில்களின் அமைதியும் சூழலும் வெளிநபர் தலையீடுகளால் மாறிப் போகும்’ என்ற எதிர்ப்புக் குரலும் ஒலிக்காமல் இல்லை.

இந்தக் குரலை, ‘அர்த்தமற்றது’ என்கிறார் வாசுநாதன்.

“இந்தத் தரச் சான்றுக்கும், கோயிலின் வழிபாட்டுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. கோயிலின் பழமை, ஆகமங்கள், சிறப்புகள் எதையும் இதை பாதிக்காது. கோயில் நிர்வாகத்துக்கு மட்டும் தான் தரச்சான்று வழங்கப்பட்டது. கோயிலை நிர்வகிப்பதும் ஒரு வகையில் நிறுவன நிர்வாகம் போலத்தான். வழிபாடு மற்றும் ஆகம விதிகளில் தரச்சான்று நிறுவனம் எந்தச் சூழலிலும் தலையிடாது. நிர்வாகம், பதிவேடு பராமரிப்புகள் மட்டுமே கண்காணிக்கப்படும். நிர்வாக ஒழுங்கையும், பக்தர்களுக்கான வசதியையும் இந்தத் தரச்சான்று உறுதி செய்யும்.

கோயில்களின் சுற்றுப்பறச்சூழல் மேம்படும். பக்தர்களுக்குத் தரமான வசதிகள் கிடைக்கும். அதே நேரம் தரச்சான்று பெறாத கோயில்களில் நிர்வாகம் சரியில்லை என்று பொருள் கொள்வதும் தவறு,” என்கிறார் வாசுநாதன்.


வாத, பிரதிவாதங்கள் ஒரு பக்கம் நடந்து கொண்டிருந்தாலும், திருவான்மியூர் மருந்தீசுவரர், பெசன்ட்நகர் அஷ்டலட்சுமி, மண்ணடி காளிகாம்பாள், திருவொற்றியூர் வடிவுடையம்மன், பழநி மற்றும் திருச்செந்தூர் முருகன்கள், ஸ்ரீரங்கம் அரங்கன், மதுரை மீனாட்சி உள்ளிட்டோரும் தரச்சான்றிதழ் பெற பரபரப்பாக இருக்கிறார்கள்!

– வெ.நீலகண்டன்.

நன்றி: குங்குமம்: **26.7.2010** இதழ்.

# ஆன்ம தரிசனம்

-தென்னம்பட்டு ஏகாம்பரம்



இன்றைய மானிடன், தூலத்தையே சதமெனப் போற்றி வளர்த்து இளமைத் துடிப்பினில் ஐம்புல இன்பங்களில் மூழ்கி, விளையாடி வாழ்நாளை வீணாக்குகிறான். பின் நோயும், மூப்பும் எதிரொலிக்கின்றன.

அந்த எதிரொலிக்குத் தூலத் தேகம் ஈடு கொடுக்க மாட்டாமல் நடுங்கும் வேளை, ஆன்மிக வாழ்வு பற்றிச் சிந்திக்கத் தொடங்குகிறான். அதனால் என்ன பயன்?

ஆனால், பண்டைய காலத்தில் நம் அருளாளர்கள் 'இந்த உலக வாழ்வை ஒரு நெடும்பயணத்தில் சற்றுத் தங்கி இளைப்பாறும் சத்திரம்' என்றே நினைத்தனர். அவர்கள்

தேக சுகம் நிஜமல்ல; நிழலென்றனர்.

இந்தத் தூலம் வெறும் சட்டை; புறத் தோற்றம். இன்பமோ, துன்பமோ அதிகமாயின் கிழிந்த சட்டையாகி விடுகிறது. ஆன்மா அந்நேரம் இந்தச் சட்டையைத் தூக்கி எறிந்து விட்டுப் புறப்படுகிறது என்பதைத் தெளிவாக நம் ஞானிகள் உணர்ந்திருந்தனர்.

இந்த அழியும் தூலத் தேகத்திற்குள்ளே சூக்குமம், காரணம், அதிகாரணம் என மூன்று தேகங்கள் உள்ளன.

சூக்குமத் தேகத்துள் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் உள்ளது; ஆன்மாவும் உள்ளது.

அகங்காரம் முன் ஜென்ம வினையாலும், இப்பிறவியில் சகவாசத்தாலும், உண்ணும் உணவாலும் விசுவரூபம் எடுக்கிறது.

தூலத் தேகம் மழலைப் பருவம் முதல் முதுமைக் காலம் வரை ஆண்பிள்ளையாயின் சைசவம், வாலிபம், கௌமாரம், யௌவனம், வார்த்திகம் என்றும், பெண் பிள்ளையாயின் பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண், விருத்தை என்றும் பல பருவங்களாக மாறிய வண்ணம் இருக்கிறது. இஃது அறிவற்ற ஜடம்; மனமெனும் எஜமானனின் ஏவல்படி இயங்கும் பணியாள்.

ஒரு பொருளைக் காண்கிறோம். அதுதானா? அல்லது வேறானதா என எண்ணும்போது அதை மனம் என்கிறோம்.

பிறகு அப்பொருள் அதுதான்; வேறன்று என்று நிச்சயிக்கும்போது புத்தி என்கிறோம்.

தனக்குப் பிரியமான பொருளைத் தொடர்ந்து சிந்தித்து ஞாபகத்தில் வைக்கும் குணத்தைச் சித்தம் என்கிறோம்.

இவ்வுலகப் பொருள்கள் மீது பற்று ஏற்பட்டு அப்பொருள்கள் கைவரப் பெற்று தன்னுடையது என்று நினைக்கும்போது அகங்காரம் ஏற்படுகிறது.

இதனையே 'நினைத்தல், விசாரித்தல், நிச்சயித்தல், அகங்கரித்தல் என்னும் சூக்கும கரணத் தொழில்களும், அவைகளை இயற்றும் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் சூக்குமக் கரணங்களும்'., என்பார் வள்ளற்பெருமானார்.

உடலுக்கு அப்பாற்பட்டது மனம்;

ஆனால் மனமே ஆன்மாவல்ல.

மனம் என்பது புலன் வழி போய் பொறியைத் தொட்டு அவற்றை அலைக்கழிக்கிறது.

மனம் குரங்கு போல இங்குமங்கும் தாவிப் பாய்கிறது.

மனம் என்ன தீர்மானிக்கிறதோ அதன்படியே தூலத் தேகம் பேயாட்டம் ஆடுகிறது.

கண், வாய், மூக்கு, செவி, தேகம் எனும் ஐம்பொறிகளே மனத்தின் வாசல்கள். இதன்வழி செல்வனவே மனத்தின் தன்மையை உருவாக்குகிறது.

நல்லவனவற்றைப் பார்க்கவும், கேட்கவும், சஞ்சலத்தை உண்டாக்குவதைத் தள்ளி வைக்கவும் பழகிக் கொண்டால் மனத் தெளிவு, திடம் உண்டாகும்.

நம் முன்னோர்கள் வகுத்த ஆசார அநுஷ்டானங்கள், மந்திர ஜெபங்கள், ஆலய வழிபாடுகள் அனைத்தும் மனத்தின் கோணலை நிமிர்த்தி நேர்வழிப் படுத்தவே தோன்றின.

அறிவு ரூபகராக வருகின்ற ஞானிகள், மகான்கள், அவதாரப் புருஷர்கள் என்போர் மனமடங்க பல்வேறு உபாயங்கள் காட்டுகிறார்கள். அவர்களின் எண்ணத்தின் பால் ஒட்டி நிற்க, அலையும் மனம் தன் ஆற்றலையிழந்து அவர்கள் கைவசமாகிறது.

நிஜ குருபிரானின் அருளமுத வருஷிப்பை ஏற்க, மனம் அறிவு மயமாகிறது. மனம் தெய்வக் கண்ணாடியாகிறது. ஞான விழியெனும் மூன்றாவது கண்திறக்கிறது. அந்நிலையில் மனம் ஆன்மாவைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாகிறது.

சூக்குமத் தேகத்திற்கு அப்பால் உள்ள காரண தேகத்தில் ஆன்மா உள்ளது. அது உடலும் அன்று; மனமும் அன்று.

உடல் அழியக் கூடியது. மனம் மாறக் கூடியது.

உடம்பாலயத்தின் தலைவன் ஆத்மனே.

ஆன்மா பிறப்பும் இறப்பும் அற்றது.

நித்தியமான வஸ்து.

ஆணுமன்று; பெண்ணுமன்று.

அதனால்தான் ஆன்மாவை 'அது' என வேதங்கள் சொல்கின்றன.

'நீ அதுவாக இருக்கிறாய்' என்கிறது

உபநிடதங்கள்.

புலன்களைக் கடந்த காட்சியாக உள்ள ஆன்மாவை மாயையெனும் திரை மறைத்துக் கொண்டிருக்கிறது.

சற்குருவானவர் அத்திரையை விலக்க, ஆன்மா தரிசனமாகிறது.

அவதாரப் புருஷர்களுடைய பெருங் கருணையாலும், அவர்களுடைய அடியார்களின் கூட்டுறவாலும்தான் ஆன்மாவை உணர இயலும்.

'ஆத்மாவைக் கண்ணாலோ, வாய்ப் பேச்சாலோ, வேறு இந்திரியங்களாலோ, தவத்தாலோ, கருமங்களாலோ அறிய முடியாது. ஞானத் தெளிவில் பரிசுத்த மனமுடையவர், அந்த நிஷ்களமான பரிபூர்ணத்தைக் குருத் தியானத்தால் காண்கிறார்.'

– முண்டக–உபநிஷத்.

ஆத்மா பாதங்கள் இல்லாமலேயே எங்கும் ஓடுகிறது; கண்கள் இல்லாமலேயே அனைத்தையும் காண்கிறது; காதுகள் இல்லாமலேயே அனைத்தையும் கேட்கிறது.

தூலத்தையும், சூக்குமத்தையும் எவ்வாறு ஆன்மா காக்கிறதோ, அவ்வாறே இம்மூன்றையும் காப்பது பிரம்மம். இதனையே பரம்பொருள், இறை, ஈஸ்பரன், சிவம், விஷ்ணு எனப் பல நாமமிட்டு நம் சாத்திரங்கள் போற்றுகின்றன.

இறைவன் உயிர்களுக்கு உடல் தந்து, பிறப்பு இறப்பு அளிக்கும் சம்சார வலையை விரித்து வைத்து, வாழ்க்கையெனும் களத்தில் ஆட வைத்து, பின்னர் அவ்வலையைச் சுருக்குகின்ற வித்தகர் அவரே.

நாம் அனைவரும் எல்லையற்ற பிரம்மத்தின் துளிகளே.

ஜீவ கோடிகள் அனைத்திற்கும் உள்ளே நின்று அதனதன் கடமையைச் செய்ய வைப்பது ஆன்மாவே. ஆனால், மனிதனைத் தவிர மற்றவைகளுக்கு உடல் வளர்க்கும் அளவில்தான் ஆன்மா பணிபுரிகிறது. ஆனால், மனிதனிடத்தில் உள்ள ஆன்மா அண்ட சராசரங்களையும் எட்டிப் பாய்கிற வல்லபமுடையது. ஆயினும் தன்னுள்ளே உள்ள பிரம்மத்தைத் தானே அறிய முடியாது.

ஆனால், பிரம்மமே மனித ரூபமெடுத்து குரு வடிவாகி இக்குவலயத்தில் அவதரித்து, ஞான ஏக்கமுள்ள இவன் மீது கருணை கொண்டு அணைத்து அருகிருத்தி தொட்டுக் காட்டி அறிவிக்கும்போதுதான், தன்னில் இருக்கும் பிரம்ம நிலையை அனுபவிக்க முடியும். எப்போதும் அல்ல; அது நேரந்தான், 'அறியென இமைப் பொழுதில்' பிரம்மத்தை அறிவிக்கிறார்கள்.

ஆயினும் விழிப்புடன் எப்பொழுதும் ஆத்ம தரிசனம் காண்பவர், இந்தத் தூல உடலை விடும்போது குருவடி நிழல் எனும் பிரம்மத்தோடு ஒன்றெனக் கலக்கிறார்கள்.

'எதனிடத்திலிருந்து இவ்வுயிரெலாம் எழுந்தனவோ, எதனால் அவையனைத்தும் வாழ்கின்றனவோ, எதனிடத்தில் அவை திரும்புகின்றவோ, அதை அறிய நீ நாட வேண்டும். அதுவே பரம்பொருள் – அதுவே பிரம்மம்.

– தைத்–உபநிஷத்.


சிறப்பாசிரியர் மற்றும் வெளியிடுவோர்: **திரு. ப.ரா. சம்பத், இ.ஆ.ப.,**
ஆணையர், இந்து சமய அறநிலையத் துறை, தமிழ்நாடு அரசு
நுங்கம்பாக்கம் சென்னை – 600 034.
தொலைபேசி எண்: 28334811/12/13

ஆசிரியர்: **கவிஞர். தென்னம்பட்டு ஏகாம்பரம், எம்,ஏ.,**

அச்சிடுவோர்: **சென்னை மைக்ரோ பிரிண்ட் (பி) லிமிடெட்,**
130,(ப.எண் 34) நெல்சன் மாணிக்கம் சாலை,
அமைந்தகரை, சென்னை – 600 029.
தொலைபேசி எண்: 2374 0099 (5 இணைப்புகள்).

குறைந்த செலவில் நீண்ட ஆயுள் உத்திரவாதத்துடன்
கோயில் கலசங்கள், விமானம், கவசங்கள், கொடிமரம், பிரபை,
பத்தரை மாத்து தங்கத்தில் பளப்பளக்க செய்வோம்

Raja Annamalaipuram
Iyappan Temple
Golden chariot
Aug 2006



Thejus
24-Ct Gold Platings

94,g n chetty road,t.nagar, chennai 600 017. ph.2815 6370.
94440 00060, email: divyasid@gmail.com www.thejus.com

பதிவுஎண்: TN/CH(C)/305/09-11/WPP NO. 451/09-11



# அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்

## திருத்தணிகை-631209 திருவள்ளூர் மாவட்டம்

## ஆடிக்கிருத்திகை பெருவிழா 2010

## (02.08.2010 முதல் 06.08.2010 வரை)

02.08.2010 ஆடி அஸ்வினி
03.08.2010 ஆடி பரணி

04.08.2010
ஆடிக்கிருத்திகை
(முதல் நாள் தெப்பல் உற்சவம்)

05.08.2010 இரண்டாம் நாள் தெப்பல் உற்சவம்
06.08.2010 மூன்றாம் நாள் தெப்பல் உற்சவம்

### தெப்பல் உற்சவ நிகழ்ச்சி நிரல்கள்

முதல் நாள் தெப்பல் உற்சவம் 04.08.2010 மாலை 6.30மணி
இரண்டாம் நாள் தெப்பல் 05.08.2010 மாலை 6.30மணி
மூன்றாம் நாள் தெப்பல் 06.08.2010 மாலை 6.30மணி

### திருப்பணி நன்கொடை வேண்டுகோள்

9நிலை இராஜகோபுரம் கட்டும் பணி மதிப்பீடு ரூ. 4.00 கோடி மற்றும் மூலவர் சன்னதி விமானத்திற்கு தங்கத்தகடு பொருத்தும் பணி மதிப்பீடு ரூ.25.00 கோடி

தற்போது இத்திருக்கோயிலின் மலைக்கோயிலில் கிழக்குப் பகுதியில் 9 நிலையில் 122 அடி உயர இராஷகோபுரம் கட்டும் பணியும், மூலவர் சன்னதியின் விமானத்திற்கு ரூ.25 கோடி மதிப்பீட்டில் தங்கத்தகடு பொருத்தும் திருப்பணியும் துவங்கப்பட்டு மும்முரமாக நடைபெற்றுவருகிறது. இத்திருப்பணியில் பங்குபெற விரும்பும் நன்கொடையாளர்கள், உபயதாரர்கள், பக்தர்களின் விருப்பத் திற்கிணங்க ரூ.500/, ரூ1000/-, ரூ2000/-க்கான திருப்பணி நன்கொடை சீட்டுகள் திருக்கோயிலின் மலைக்கோயில் அலுவலகம், தணிகை இல்ல அலுவலகம், கார்த்திகேயன் இல்ல அலுவலகம், சரவணப்பொய்கை அறைகள் அலுவலகம் மற்றும் உபகோயில்களான மத்தூர், திருவாலங்காடு ஆகிய திருக்கோயில்களின் அலுவலகங்களில் வழங்கப்படுகிறது.மேலும் மேற்படி தங்கவிமான திருப்பணியில் பங்குகொள்ள விரும்பும் மெய்யன்பர்கள் தங்கள் நன்கொடைகளை பணமாகவோ அ ல்லது 24 கேரட் தங்கமாகவோ திருக்கோயில் அலுவலகத்தில் செலுத்தி இத்திருப்பணியில் பங்கு கொண்டு தாங்களும் தங்கள் குடும்பத்தாரும் மற்றும் தங்கள் நிறுவனங்கள் மேன்மேலும் உயர திருத் தணிகை முருகனின் திருவருள் பெறுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

### நன்கொடைகள் வங்கி வரைவோலை/ பணவோலையாக அனுப்பவேண்டிய முகவரி

இணை ஆணையர்/ செயல் அலுவலர்,
அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்,
திருத்தணிகை-631209.
தொலைபேசி எண்கள்: 044-27885247 (அலுவலகம்), 27885303 (தொலைநகலி)
www. tirutanigaimurugan.org
Email : tirutanigaimurugan@gmail.com, info@tirutanigaimurugan.org

குறிப்பு: தெப்பல் உலா வரும் சமயம் பிரபல இசை கலைஞர்களின் இசைக்கச்சேரிகள் நடைபெறும். பக்தர்கள் தங்கள் தலைமுடி காணிக்கையை திருக்கோயில் சம்பந்தப்பட்ட முடிகாணிக்கை நிலையங்களில் மட்டுமே தங்களது பிராத்தனைகளைச் செலுத்தி நிறைவேற்றிக்கொள்ள வேண்டுகிறோம்.

அ.தி.பரஞ்ஜோதி. எம்.காம்.பி.எல்., துணை ஆணையர்
இணை ஆணையர்/ செயல் அலுவலர் (கூ.பொ)

மு.ஈஸ்வரப்பன்
அறங்காவலர் குழுத்தலைவர்

அறங்காவலர்கள்

க.பாலகிருஷ்ணன் அ.வெ.சக்கரப்பன் கா.உஷாரவி பொன்.குணசேகர்